

COLOMBO PORT CITY
ECONOMIC COMMISSION

நிதியாண்டு 2021

வருடாந்த அறிக்கை

கொழும்பு துறைமுக நகர
பொருளாதார ஆணைக்குழு

உள்ளடக்கம்

- தூரநோக்கு, செயற்பணி மற்றும் விழுமியங்கள் 04
- கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் உருவாக்கம் மற்றும் வகிபாகம் 05
- சனாதிபதியின் செய்தி 06
- இராஜாங்க அமைச்சரின் செய்தி – முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு ... 07
- செயலாளரின் செய்தி – முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு 08
- தலைவரின் செய்தி 09
- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 10
- ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ பதவியணி 13
  - ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் .....
  - ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் .....
- ஆளுகை 20
  - சபைக் கட்டமைப்பு .....
  - ஆணைக்குழுக் கூட்டங்கள் .....
  - சபை ஆதரவு கட்டமைப்புகள் .....
  - நிலைபேற்றுத்தன்மை .....
  - தொழில்நுட்பம் .....
- கொழும்பு துறைமுக நகரம் – ஓர் விசேட பொருளாதார வலயம் 26
- நிதிசார் தகவல் 28
  - கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதி .....
  - நிதிக் கூற்றுக்கள் .....
  - கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை .....
  - நிதிசார் கூற்றுக்கள் .....
- கூட்டிணைப்புத் தகவல்கள் 62

எமது தூரநோக்கு

உலகத் தரம் வாய்ந்த நிலைபேறான சேவை சார்ந்த சிறப்புப் பொருளாதார வலயமாக இருத்தல்



எமது செயற்பணி

- வணிகம் செய்வதை எளிதாக்குதல்
- முதலீட்டாளர்களுக்கு உள்ளார்ந்த மதிப்பை உருவாக்குவதன் மூலம் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துதல்.
- ஸ்மார்ட் சிட்டியை வழங்குவதன் மூலம் ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குதல்
- கொழும்பு துறைமுக நகரத்தை பிராந்தியத்தில் விருப்பமான முதலீட்டு இடமாக நிலைநிறுத்துவதற்கு சுற்றுச்சூழல் நிலைத்தன்மை நியமங்களை கடைபிடித்தல்.

எமது விழுமியங்கள

- வினைத்திறன்
- வெளிப்படைத்தன்மை
- ஒழுக்கநெறி
- நம்பகத்தன்மை
- மீள்தன்மை

↘ கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் உருவாக்கம் மற்றும் வகிபாகம்

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவானது, 2021 மே 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இந்தச் சட்டமானது விசேட பொருளாதார வலயத்தின் ஸ்தாபிப்பை வழங்குவதற்கான 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் என அழைக்கப்படுகிறது. கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஊடாக, கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வர்த்தகம் மற்றும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பதிவுகள், உரிமங்கள், அங்கீகாரங்கள் மற்றும் பிற அனுமதிகளை வழங்குவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விசேட பொருளாதார வலயத்திற்குள் எளிதாக வணிகம் செய்வதை ஊக்குவிப்பதற்காக ஒற்றைச் சாளர முதலீட்டு உதவியாளராக ஆணைக்குழு செயல்படுவதுடன் வலயத்திற்குள் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்புகள் மற்றும் பிற விதிவிலக்குகளைத் தீர்மானிப்பதற்கும் வழங்குவதற்கும் அது அதிகாரம் பெற்றுள்ளது.

சர்வதேச வர்த்தகம், கப்பல் வழங்கல் சேவைச் செயல்பாடுகள், கடல் கடந்த வங்கிச் சேவை, நிதி சேவைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை சேவைகள், பெருநிறுவன தலைமையக செயல்பாடுகள், பிராந்திய விநியோக செயல்பாடுகள், சுற்றுலா மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட விடயப் பரப்புகளில் அதிகரித்த பொருளாதார செயற்பாடுகள் மூலம் நாட்டின் தொடர்ச்சியான அபிவிருத்திக்கு உதவுகளின் ஏனைய துணைச் சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் எளிதாக்குதல் ஆகியவை **ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்களாகும்.** இது சேவைப் பொருளாதாரத்தின் பல்வகைப்படுத்தலை எளிதாக்கி, அந்நியச் செலாவணி உட்பாய்ச்சலை ஊக்குவிப்பதுடன், வலயத்தின் ஊடாக நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.

COLOMBO PORT CITY
ECONOMIC COMMISSION

CHEC போர்ட் சிட்டி கொழும்பு (செயற்திட்ட கம்பனி) நிறுவனத்திடமருந்து மீட்டெடுக்கப்பட்ட 269 ஹெக்டேர் நிலம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2019 அக்டோபரில் உத்தியோகபூர்வமாக மாற்றப்பட்டது. ஆகஸ்ட் 2021 இல் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் காணப்பட்ட மீட்கப்பட்ட நிலமானது கொழும்பு துறைமுக நகர பொருளாதார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சனாதிபதியின் மானியத்தின் மூலம் இலவச அடிப்படையில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் மூலம், கொழும்பு துறைமுக நகரத்தில் உள்ள அனைத்து சந்தைப்படுத்தக்கூடிய காணிகளிலும் முதலீட்டாளர்களுடன் நீண்ட கால குத்தகை உடன்படிக்கைகளை ஏற்படுத்த முடியும்.

கொழும்பு துறைமுக நகரத்திற்கான உயர்மட்ட ஒழுங்குபடுத்தல் அமைப்பாக செயற்படுவதற்காக, கொழும்பு துறைமுக நகர பொருளாதாரச் சட்டத்தின் 23 (2) (அ) பிரிவின் கீழ், செற்திட்ட கம்பனியால் ரூபா 400 மில்லியன் தொகை வட்டியற்ற முற்பணம் என்ற அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது. கொழும்பு துறைமுக நகர பொருளாதாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை நிறைவேற்றுவதில் ஆணைக்குழு பெறும் வசதிகள் மற்றும் பிற தொடர்புடைய கட்டணங்கள் மூலம் அத்தகைய முன்பணம் திருப்பிச் செலுத்தப்படும்.

இலங்கை அரசாங்கம், செயற்திட்ட கம்பனி மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் - மீட்டெடுக்கப்பட்ட 269 ஹெக்டேயர் காணியில் 116.1 ஹெக்டேயர் சந்தைப்படுத்தக்கூடிய காணியானது ஏறத்தாழ 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் மொத்த முதலீட்டை அறவிட்டுக் கொள்வதற்காக செயற்திட்ட கம்பனிக்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது.

சனாதிபதியின் செய்தி



சமீபகால வரலாற்றில் நமது நாடு சந்தித்திராத ஒரு முன்னெதிர்வு கூறப்படாத நிலையை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். தற்போதைய பொருளாதார சவால்களிற்கு முடிவு காண்பதற்கு நீண்ட கால தீர்வுகளை நோக்கி நாம் செல்ல வேண்டியுள்ளது.

கொழும்பு துறைமுக நகரம் என்பது இலங்கையின் மேற்கு மாகாணத்தில் கொழும்பில் அமைந்துள்ள 269 ஹெக்டேர் மீட்டெடுக்கப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டுள்ளதுடன் கொழும்பு நிர்வாக மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும் காணப்படுகின்றது. சேவைப் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் அளித்து இலங்கையிலிருந்து முதலீடுகள் மற்றும் வர்த்தகம் செய்வதற்கு வசதியாக இந்த நிலப்பரப்பு சிறப்புப் பொருளாதார வலயமாக (கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயம் என அழைக்கப்படும்) அபிவிருத்தி செய்யப்பட உள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தின் அனைத்து முதலீடுகள் மற்றும் செயற்திட்டங்களுக்கான ஒற்றைச் சாளர முதலீட்டாளர் வசதியாளராக ஆணைக்குழு செயல்படும். நகரத்திற்குள் காணப்படுகின்ற நிலமானது ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக உள்ளதுடன் ஒரு செயற்திட்டத்திற்கான நிலத்தை குத்தகைக்கு எடுப்பதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

இப்போது உலகளாவிய வணிகத்தின் ஒரு பகுதியாக காணப்படுகின்ற நவீன பொருளாதார அதிர்ச்சிகளை சமாளிக்க ஒரு வலுவான அடித்தளம் அமைக்கப்பட வேண்டும். இதற்காக பொருளாதாரம் நவீனப்படுத்தப்பட வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மை நிலைநாட்டப்பட்டு போட்டி ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றப்பட வேண்டும். இச்சூழலில், பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் எளிதாக்குவதற்கும் சேவை ஏற்றுமதிகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நாங்கள் இப்போது உருவாக்கி வருகிறோம். நமது பொருளாதார மரபானது பண்டைய காலந்தொட்டு வெளிநாட்டு வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதனால் சர்வதேச வர்த்தகம், கப்பல் தளவாட செயல்பாடுகள், கடல் கடந்த வங்கி மற்றும் நிதிச் சேவைகள், தகவல் தொழில்நுட்ப மற்றும் வணிக செயல்முறை வழங்கல் சேவைகள், கம்பனிகளின் தலைமையக செயல்பாடுகள், பிராந்திய விநியோக செயல்பாடுகள் மற்றும் சுற்றுலா ஆகியவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டில், இந்து-பசிபிக் பிராந்தியம் உலகின் மிகவும் சக்திவாய்ந்த பொருளாதாரக் களமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த சூழலில், நமது நாட்டின் மூலோபாய புவியியல் அமைவிடம் மிகவும் முக்கியமானதாக உள்ளது. கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்தின் அபிவிருத்தியைத் தொடர்ந்து இந்தச் சாதகமான நிலையை நாம் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதன் மூலம், இலக்குத் துறைகளுக்கு கவர்ச்சிகரமான சிறப்பு உட்கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறைகளுடன் கூடிய சர்வதேச நிதி மையம் மற்றும் சேவை மையமாக இலங்கை காணப்பட முடியும் என்பதுடன் ஆசியாவில் சேவை ஏற்றுமதிக்கான நுழைவாயிலாகவும் செயற்ட முடியும்.

Ranil Wickremesinghe

இலங்கை சனாதிபதி
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்

இராஜாங்க அமைச்சரின் செய்தி

முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு



அரசாங்கத்தின் தேசிய கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க, அதிமேதகு சனாதிபதி அவர்களின் பலமான தலைமைத்துவத்தின் கீழ், புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்கி நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தேறிய பங்களிப்பை அதிகரித்தல் உள்ளிட்ட அதிகளவில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார நன்மைகளை இலங்கைக்கு வழங்குவதற்காக ஊக்குவிப்புத் துறைகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் தனியார் துறை முதலீடுகளை மேம்படுத்தும் பணி எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

2021 இல் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுதல் ஒரு புதுமையான தொழில்முனைவாக இருப்பதுடன் புத்தாக்க பொருளாதாரக் கருத்தைக் குறிப்பதாகவும் உள்ளது. இது ஏனைய நாடுகளில் பலனளித்துள்ள போதிலும், எமக்குப் புதியதோர் கருப்பொருளாகும். இது சர்வதேச வர்த்தகம், கப்பல் போக்குவரத்து, வங்கி மற்றும் நிதிச் சேவைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத்துறையில் இலங்கையின் செயற்பாடுகளில் புரட்சியை ஏற்படுத்தும் ஒரு எண்ணக்கருவாகும். 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு நிறுவப்பட்ட சட்டங்கள் அற்ற சுதந்திரமான கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்தை ஸ்தாபிப்பதும் புதிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவதும் உலகளாவிய நிதி நடைமுறைகள் மற்றும் அணுகுமுறைகளுடன் செயல்படுவதும் ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாக உள்ளது. இத்தகைய சிறப்புப் பொருளாதார வலயங்களைக் கொண்ட ஏனைய அதிகார வரம்புகளுக்கு இணையாக எளிதாக வணிகம் செய்வதில் நாட்டின் தரவரிசையை மேம்படுத்தும் செயற்பாடாக இதனை நாம் கருதுகிறோம்.

இலங்கைக்கான உலகத் தரம் வாய்ந்த நகரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழுவும் முகாமைத்துவக் குழுவும் இணைந்து எதிர்பார்த்ததை வழங்குவதற்கு சிறந்த தயார் நிலையில் உள்ளதாக நான் நம்புகிறேன்.

Dilum Amunugama

இராஜாங்க அமைச்சர் - முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு

செயலாளரின் செய்தி

முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு

முதலீடுகளை அதிகரித்து முதலீட்டாளர் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக ஆர்வமுள்ள தரப்புக்களுடன் இணைந்து செயற்படுதல்.



காலத்தின் தேவையானது வியாபாரத்திற்கு சாதகமான மற்றும் போட்டித்தன்மை வாய்ந்த சூழலை வழங்குவதுடன் எமது மக்களுக்கு பொருளாதார மற்றும் சமூக நன்மைகளுடன் கூடிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல், சுற்றுலாத்துறை, சர்வதேச வர்த்தகம், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் அந்நிய செலாவணி வருமானத்தை மேம்படுத்துவதற்கு அதிக அர்ப்பணிப்பை இலங்கைக்கும் அரசாங்கத்திற்கும் வழங்கியுள்ளது. கொழும்பு துறைமுக நகரம் பிராந்தியத்தில் சேவை சார்ந்த ஒரு சிறப்பு பொருளாதார வலயமாவதுடன் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு (ஆணைக்குழு) ஆனது எமது முதலீட்டாளர்களுக்கு பெறுமதியை அதிகரிக்கின்ற ஒரு ஒற்றை சாளர முதலீட்டு வசதியாளராக உள்ளது.

2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆணைக்குழு, அரசாங்கம் மற்றும் பங்குதாரர்களை வழிநடத்துவதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது.

ஆணைக்குழுவினால் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் அர்ப்பணிப்பு மற்றும் விரிவான சேவையைப் பாராட்டுகின்ற அதேவேளை, கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான அனைத்து செயற்பாடுகளிலும் இலகுவாக வர்த்தகம் செய்வதை எளிதாக்குவதன் மூலம் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எமது வலுவான ஆதரவையும் நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்காக தற்போதைய சூழலில் எங்கள் பங்குதாரர்கள் அனைவரும் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளவும், சிக்கல்களை நிவர்த்தி செய்யவும், முதலீட்டாளர்-நட்புரீதியான வணிக நிலப்பரப்பின் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வளர்க்கவும் பயனுள்ள ஒத்துழைப்பு மற்றும் வனைத்திறமையான வசதிகளை அரசாங்கம் இப்போது கவனத்தில் கொண்டுள்ளது என்பதை மேலும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சேவைகளின் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்கையில் நாட்டின் வர்த்தக மற்றும் முதலீட்டு சூழலை மேம்படுத்துவதில் காணப்படுகின்ற பிரதான சிக்கல்களிற்கு தீர்வாகவும் சிறப்புப் புத்தாக்கம் மற்றும் மாற்றங்களிற்கான திருப்புமுனையாகவும் கொழும்பு துறைமுக நகரம் காணப்படும் என்பதில் நான் மிகவும் நேர்மறையான கருத்தை கொண்டுள்ளேன்.

M M Nayeemudeen

செயலாளர், முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு

தலைவரின் செய்தி

அன்புள்ள மதிப்புக்குரிய பங்குதாரர்களே,



கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சார்பாக, 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கான எமது வருடாந்த அறிக்கையை உங்களுக்கு வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் 2022 யூலை மாதமே முதன் முறையாக தலைவராக நியமிக்கப்பட்டமையால் வருடாந்த அறிக்கைக்கான எனது அறிமுகம் சுருக்கமானதாகும்.

12 பேர் கொண்ட பல்திறன் கொண்ட குழுவுடனும், முதன்மை அபிவிருத்தியாளருடனும இணைந்து ஆணைக்குழு மிகவும் சவாலான ஆண்டை கடந்து சென்றது. மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவிற்கான முன்னணி சர்வதேச நிதி மையம் மற்றும் சேவை மையத்தை வடிவமைத்து, உருவாக்கி நிர்வகித்தல் மற்றும் தெற்காசியாவில் மிகவும் நிலைபேறான அலுவலகம், சில்லறை விற்பனை, ஓய்வான வாழ்விடத்தை உருவாக்குவதே எங்கள் இலட்சியமாகும். இந்த இலக்கை அடைவதற்காக, செலவு குறைந்த உரிம தீர்வுகள், நோக்கத்திற்கேற்ற ஒழுங்குமுறைகள் மற்றும் புதுமையான துரித நிகழ்சித்திட்டங்களை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். நீண்ட கால நிலைபேறான வளர்ச்சிக்கு வழிவகுக்கின்ற வணிகச் செயல்பாடுகளில் சிறந்து விளங்குதல், மாற்றத்தைத் தழுவுதல், புதுமைகளைத் தொடர்ந்து ஊக்குவித்தல், உயர்தர சேவையை வழங்குதல் - செலவுகளைக் குறைத்தல் மற்றும் முதலீட்டாளர்களுக்கான பெறுமதியை அதிகப்படுத்துதல், சேவை வழங்கலுக்கான LEAN Six Sigma முறையைச் செயல்படுத்துதல் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல் ஆகியவற்றை ஆணைக்குழு நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிறந்த தரமான விதிமுறைகளுடன் உலகத் தரம் வாய்ந்த நிலைபேறான நகரத்தை உருவாக்குவதே எங்கள் உத்தியாகும். இந்த மூலோபாயமானது அனைத்து பங்குதாரர்களுக்கும் ஒரு வினைத்திறனான, வெளிப்படையான, நம்பகமான, நெறிமுறை மற்றும் உறுதியான, சிறப்புப் பொருளாதார வலயத்தை, நிலைபேறான விளைவுகளுடன் உருவாக்க உதவுகிறது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள், சிறந்த திறமைகள் மற்றும் உள்கட்டமைப்புகளை ஈர்ப்பதற்காக இது செயல்படுத்தப்படுவடுன் - வணிகத்தை எளிதாக்குதல், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச வர்த்தகம், கப்பல் போக்குவரத்து, வழங்கல் சேவைகள், ஐடி (IT), பிபிஓ (BPO) போன்றன இதன்மூலம் மேம்படுத்தப்படும்.

சமூக நலனுக்கான ஒரு சக்தியாக இருப்பதற்காக ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், சமூகங்கள், கொள்கை வகுப்பாளர்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் பொதுச்சமூகம் என அனைத்துப் பங்குதாரர்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டிய பொறுப்பு வணிகத்திற்கு உண்டு என்று நாங்கள் நம்புகிறோம். செயல்படுவதற்கான சமூக சுதந்திரத்தைப் பேணுவதற்கு இது இன்றியமையாததாக இருப்பதுடன் அதைவிட முக்கியமாக, நாம் சார்ந்திருக்கும் சமூகங்களுடன் கூட்டுப் பங்காளித்துவத்தைப் பேணுவதும், முதலீட்டாளர்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்கள் மீதான நமது உறுதிப்பாட்டில் நம்பிக்கையை வளர்ப்பதும் இன்றியமையாததாகும்.

தரமான வேலையை வழங்குவதே நாம் செய்யும் எல்லாவற்றின் அடிப்படையிலும் உள்ளது. இது நம்பிக்கையை வளர்ப்பதற்கும் நீடித்த விளைவுகளை வழங்குவதற்கும் அடித்தளமாகும். எங்கள் பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காகத் தரம், சுதந்திரம், சிறப்பு மற்றும் நிர்வாகத்தை வழங்க ஆணைக்குழு தொடர்ந்து செயல்படுகிறது.

ஆணைக்குழுவின் சார்பாக, சனாதிபதியின் செலாளரும் முன்னாள் தலைவருமான திரு. காமினி மாரப்பன மற்றும் ஆணையாளர் திரு. ஜெரார்ட் ஒண்டாட்ஜி மற்றும் மிகவும் கடினமான ஆண்டில் கொழும்பு துறைமுக நகரத்தின் மீது தொடர்ந்து நம்பிக்கை வைத்து பங்களிப்பை நல்கிய எங்கள் பங்குதாரர்களை நான் அங்கீகரிக்க விரும்புகிறேன்.

Dinesh Weerakkody

தலைவர்

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கொழும்பு துறைமுக நகரம் ஒரு சேவை சார்ந்த சிறப்பு பொருளாதார வலயம் (SEZ) ஆவதுடன் இது மத்திய கொழும்பில் அமைந்துள்ள மீட்கப்பட்ட நிலத்திலுள்ள புத்தம் புதிய நகர அபிவிருத்தி ஆகும். தெற்காசியாவில் மிகவும் வாழக்கூடிய நகரமாக "ஸ்மார்ட் சிட்டி" கருத்துகளை இந்த நகரம் கொண்டுள்ள அதே வேளை, சமீபத்திய நிலைபேறான நகர கட்டிட வடிவமைப்புகளின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

செயல்முன்னேற்றம்



நில சீரமைப்பு வேலைகள் 2019 இல் நிறைவடைந்ததுடன் அடிப்படை உள்கட்டமைப்புகள் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார மந்தநிலை காரணமாக கடந்த சில வருடங்கள் இலங்கை அரசாங்கத்திற்கும் செயற்திட்ட கம்பனிக்கும் மிகவும் சவாலானதாக இருந்தது. எவ்வாறாயினும், 2022 வரையிலான கட்டம் 1 இன் உள்கட்டமைப்புகளின் நடைமுறை வேலைகளின் பூரணப்படுத்தல், சீராக்கப்பட்ட காலக்கெடுவுடன் செய்யப்பட்டதுடன் செயற்திட்ட கம்பனி மூலோபாய அடுக்குகளை உருவாக்குவதற்காக 5 ஆண்டு மூலோபாய ரோல்-அவுட் கட்டுமானத் திட்டத்தைத் 2022 ஆம் ஆண்டில் தொடங்க திட்டமிட்டுள்ளது. பிரதான திட்டத்தின் படி, நகரமானது 6.3 மில்லியன் சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்ட மொத்தத் தளப் பகுதியை (ஜிஎ.்ப்ஏ) உள்ளடக்கியிருக்கும். இதில் குடியிருப்பு, வணிகம், சில்லறை வணிகம், விருந்தோம்பல் துறைகள் மற்றும் பிற சமூக உள்கட்டமைப்புக்கான இடம் ஆகியவை அடங்கும்.

நில மறுசீரமைப்பு மற்றும் கட்டம் I இன் கீழான ஆரம்ப உள்கட்டமைப்பின் பெறுமதி சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் 2022 செப்டம்பர் நிலவரப்படி, ஏறத்தாழ 1.2 பில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளன. கொழும்பு துறைமுக நகரத் திட்டம் 83,000 க்கும் அதிகமான புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் சுமார் 80,000 மக்கள் வசிக்கின்ற அண்ணளவாக 250,000 தற்காலிக சனத்தொகையைக் கொண்டிருக்கும்.

2022 ஆகஸ்ட் இல் சனாதிபதியின் கொள்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டமைப்பிற்கு இணங்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு ("ஆணைக்குழு") தற்போது கொழும்பு துறைமுக நகரத்தை கவர்ச்சிகரமான, சர்வதேச அளவில் போட்டித்தன்மை வாய்ந்த, முதலீட்டு இடமாக உலகளாவிய முதலீட்டாளர்கள் மத்தியில் மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

இந்த நோக்கத்தை அடைவதற்காக, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்கள் என்ற வகையில் கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள அனைத்து நிலங்களின் முதன்மை அபிவிருத்திக்கான ("முதன்மை முதலீட்டாளர்கள்") முதலீடுகள் மற்றும் வணிகங்களைத் தொடங்கும் முதலீட்டாளர்கள் ("இரண்டாம் நிலை முதலீட்டாளர்கள்") ஆகியோரை நியமிப்பதற்கும் 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட விதிகளின் கீழ் மேற்படி முதன்மை முதலீட்டாளர்கள் மற்றும் இரண்டாம் நிலை முதலீட்டாளர்களுக்கு விதிவிலக்குகள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும் ஆணைக்குழுவை அங்கீகரிக்குமாறு ஆணைக்குழு பாராளுமன்றத்திடம் கோரியுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தை செயற்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளின் நிலைவரம் வருமாறு.

ஒழுங்குவிதிகள்	நிலைவரம்
அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் பதிவுச் செயல்முறை	வர்த்தமானியில் வெளியிடப்பட்டது
அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குரிய கட்டணம்	-மேற்படி-
கடல்கடந்த கம்பனி	-மேற்படி-
அபிவிருத்திக் கட்டுப்பாடு	-மேற்படி-
2006 இன் முத்திரைத் தீர்வை விசேட ஏற்பாடுகள் சட்டத்திலிருந்து ஆணைக்குழுவிற்கு விதிவிலக்கு வழங்குதல்	-மேற்படி-
தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவமான வணிகங்கள்	அமைச்சரவை அங்கீகாரத்திற்காக காத்திருக்கப்படுகிறது
தீர்வையற்ற	-மேற்படி-
சந்தைப்படுத்தக்கூடிய காணிகளை குத்தகைக்கு வழங்குதல்-மூன்றாம் தரப்புக்கு கைமாற்றுதல் மற்றும் அந்நியச் செலாவணியில் கொடுப்பனவுகளைப் பெறுதல்	வெளியிடுதல் செயன்முறை இடம்பெற்று வருகிறது
அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் வணிகங்களில் ஈடுபடுதல்	-மேற்படி-
இலங்கையிலுள்ள வதிவோர்களுடன் வணிகங்களை நடத்துவதற்கான விதிமுறைகள்	-மேற்படி-
கொழும்பு துறைமுக நகரத்திற்கு வெளியே வணிகங்களில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கான நடைமுறைகள் (2026 வரை)	-மேற்படி-
இலங்கை நாணயத்தை வெளிநாட்டு நாணயங்களிற்கு மாற்றுவதற்கான நடைமுறை	-மேற்படி-
சில்லறை வசதிகளை பயன்படுத்துதல்	-மேற்படி-
பொழுதுபோக்குச் செயற்பாடுகள்	-மேற்படி-
அடுக்குமாடி வீடுகள் மற்றும் வழங்கல் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய EMC தொழிற்பாடுகள்	-மேற்படி-
அடுக்குமாடி வீடுகள் மற்றும் வழங்கல் முகாமைத்துவத்திற்கான ஒழுங்குவதிகள்	-மேற்படி-
கொழும்பு துறைமுக நகரத்தில் பிரயோகிக்கக் கூடிய வரிகள் மற்றும் தீர்வைகள்	-மேற்படி-
மிகைஅறவீடுகள், தண்டப்பணங்கள் போன்றன தொடர்பில் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய தொகைகளை அறவிடுதல்	-மேற்படி-
EMC மற்றும் பிரதான சமூகப் பிரகடனம்	-மேற்படி-
வங்கித்துறை வணிகங்கள்	நாணயச் சபையின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கப்படுகிறது

சமூக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் அடையாளம் காணப்பட்ட நிச்சயிக்கப்பட்ட நிலப் பகுதிகளில் செயல்படுவதற்கு ஐக்கிய இராச்சியத்தின் புகழ்பெற்ற பாடசாலை வியாபாரக்குறி மற்றும் அமெரிக்காவின் புகழ்பெற்ற மருத்துவமனை வியாபாரக்குறி ஆகியவற்றுடன் ஒப்பந்தங்களை பூரணப்படுத்தும் இறுதி கட்டத்தில் ஆணைக்குழு உள்ளது. கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையத்தின் முதலீட்டாளர் மற்றும் செயற்பாட்டாளரை பாதுகாப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

முதலீட்டாளர் கொழும்பு துறைமுக நகரத்தில் தொழில் தொடங்குவதற்கு முக்கியமானதாக காணப்படுகின்ற மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்கள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறைகள் ஆகியன அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் கொழும்பு துறைமுக நகரத்தை முதலீட்டாளர்களுக்கு தீவிரமாக ஊக்குவிக்க ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

ஆணைக்குழுவின் நோக்கமானது சந்தைப்படுத்தக்கூடிய நிலத்தில் சந்தைப்படுத்தக்கூடிய நிலத்தில் 25% நிலத்தை மூன்று வருடங்களில் குத்தகைக்கு விடுவது ஆணைக்குழுவின் தற்போதைய நோக்காகக் காணப்படுவதுடன் மேற்கூறிய இலக்கை அடைய முடியுமென ஆணைக்குழு நம்பிக்கை கொண்டுள்ளது. மொத்த முதலீடு (நிலம், கட்டிடங்கள் மற்றும் பிற அபிவிருத்திகள்) சுமார் 5.6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுமென்றும் ஆணைக்குழு கருதுகிறது.

புதிய வளர்ச்சி சுழற்சி மற்றும் எதிர்கால தேவைகளின் இந்த புதிய யுகத்தில், எங்கள் பங்குதாரர்களிற்கு ஒரே இடத்தில் தீர்வுகள் என்ற தொனிப்பொருளில் கொழும்பு துறைமுக நகரம் மற்றும் ஆணைக்குழுவின் பலம் மற்றும் விரிவான பெறுமதியை மேம்படுத்துவதன் மூலம் புதிய வாய்ப்புகளை கைப்பற்றுவதற்கும் கட்டியெழுப்புவதற்கும் ஆணைக்குழு சிறந்த நிலையில் உள்ளது என நான் நம்புகிறேன். எங்களின் மூலோபாயத்தை செயல்படுத்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி, மேலும் நிலைபேறான எதிர்கால வணிகத்தை நோக்கி பாடுபடுவோம்.

நன்றி நவிலல்

ஆணைக்குழுவின் பதவியணியினர் மற்றும் வணிக பங்காளிகளின் ஒத்துழைப்புக்கும் கடின உழைப்புக்கும் பணிவுடன் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். ஆணைக்குழுவின் முன்னேற்றத்திற்கு நல்கிய பங்களிப்புகளுக்காக எனது சக ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, எங்களது அனைத்து முக்கிய பங்குதாரர்களின் தொடர்ச்சியான ஆதரவிற்காக நான் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்க விரும்புகிறேன்.

Dr. Priyath B Wickrama

பணிப்பாளர் நாயகம்



ஆணைக்குழு உறுப்பினர்



Dr Priyath B Wickrama

Director General / Commissioner



Saliya Wickramasuriya

Commissioner



Mahinda Siriwardana

Secretary to the Treasury



Dinesh Weerakkody

Chairman



Reyaz Mihular

Commissioner



Rohan De Silva

Commissioner



Kushan Kodituwakku

Commissioner

ஆணைக்குழு உறுப்பினர் சுயவிவரங்கள்

தினேஷ் வீரக்கொடி

தினேஷ் வீரக்கொடி, DBA, அவர்கள் ஹற்றன் நெஷனல் வங்கி பிஎல்சீ மற்றும் கொமர்ஷல் வங்கி பிஎல்சீ ஆகியவற்றின் தலைவராக இருந்துள்ளார். அவர் தற்போது அதாவது 2022 யூலை 28 முதல் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தலைவராக பணியாற்றுகிறார்.

திரு. தினேஷ் அவர்கள் இலங்கையின் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதித் தலைவராகவும், இலங்கையின் சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் இணைத் தலைவராகவும் இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனத்தின் உப தலைவராகவும் மற்றும் பல நிறுவனங்களின் பணிப்பாளராகவும் செயற்படுகின்றார். அவர் தற்போது சனாதிபதியின் திறைசேரி விவகாரங்களுக்கான ஆலோசகராகவும் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவராகவும் உள்ளார். அவர் இலங்கையின் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபை, இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம், இலங்கை தேசிய மனித வள மேம்பாட்டு பேரவை ஆகியவற்றின் முன்னாள் தலைவர் ஆவார். அவர் இலங்கை பிரதமர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அமைச்சரின் ஆலோசகராகவும் இருந்துள்ளார்.

கலாநிதி பிரியத் பி விக்ரம

கலாநிதி பிரியத் அவர்கள் இலங்கையிலுள்ள கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்தின் மிக முக்கியமான முதலீட்டை நிர்வகிக்கின்ற, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் பதிற்கடமை பணிப்பாளர் நாயகமாக 2022 மார்ச் முதல் நியமிக்கப்பட்டார்.

அவர் இதற்கு முன்னர் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளராகவும், இலங்கை துறைமுக அதிகாரசபையின் (SLPA) தலைவராகவும் இருந்துள்ளதுடன், இதன் போது அவர் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கட்டுமானம், கொழும்பு துறைமுக விரிவாக்கம் மற்றும் தற்போது நடைபெற்று வருகின்ற கொழும்பு துறைமுக நகர செயற்திட்டம் போன்ற குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு செயற்திட்டங்களை ஆரம்பித்து செயல்படுத்தினார்.

கலாநிதி பிரியத் அவர்கள் மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் இயந்திரவியல் பொறியியலில் BSc (Hon) பட்டத்தை பெற்றுள்ளதுடன் அந்த பல்கலைக்கழத்திலேயே பொறியியல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன், லண்டனில் உள்ள சர்வதேச அமெரிக்க பல்கலைக்கழகத்திலிருந்து செயற்பாட்டு முகாமைத்துவத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

அவர் பல ஆண்டுகளாக அவரது சாதனைகளுக்காக பல்வேறு சர்வதேச மற்றும் உள்நாட்டு விருதுகள் மற்றும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளார்.

சாலிய விக்ரமசூரிய

திரு. சாலிய அவர்கள் 1984 இல் அப்ஸ்ட்ரீம் எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் இணைந்து, உலகின் மிகப்பெரிய பெற்றோலிய சேவை கம்பனியான "ஸ்க்லம்பெர்கர்" இல் பணிபுரிந்தார். உலகெங்கிலும் 20 வருடங்கள் எண்ணெய் ஆய்வில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, அவர் 2004 இல் இலங்கைக்குத் திரும்பினார். மேலும், அவர் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர்/ பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார்.

அவர் 2006 முதல் 2009 வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராக செயற்பட்ட பின்னர் கடந்த 3 ஆண்டுகளாக் தனது திறமைகளை சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் செலவிட்டார். 2011 இல் இலங்கைக்குத் திரும்பிய அவர், நாட்டின் வளர்ந்து வரும் அப்ஸ்ட்ரீம் பெற்றோலியத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்யும் நிறுவனமான பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தின் பணிப்பாளர் நாயகமாக 6 வருடங்களைச் செலவிட்டுள்ளார்.

திரு. சாலிய அவர்கள் 2017 ஆம் ஆண்டு முதல் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் எரிசக்தி குழுவின் இணைத் தலைவராக இருந்து வருகிறார் என்பதுடன், 2022 பெப்ரவரி வரை கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகத்தின் பாத்திரத்தை வகித்த அவர் 2021 மே மாதம் முதல் இந்த ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மேலும். புதிதாக உருவாக்கப்பட்ட அப்ஸ்ட்ரீம் பெற்றோலிய ஒழுங்குபடுத்தல் நிறுவனமான இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஆகவும் அவர் செயற்படுகின்றார்.

↘ மஹிந்த சிறிவர்தன

திரு. மகிந்த அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநராகவும், இலங்கை மத்திய வங்கியில் 31 வருடங்களுக்கும் மேலான சேவை அனுபவத்தைக் கொண்டவராகவும் உள்ளார்.

அவர் பிரதி ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் மற்றும் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகிய முக்கிய பதவிகளை வகித்துள்ளார். அவர் திறைசேரி மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளராக பணியாற்றுவதற்காக, இலங்கை மத்திய வங்கியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவர் மத்திய வங்கி மற்றும் நிதி ஆணைக்குழுவின் நாணய சபையின் முன்னாள் உத்தியோகபூர்வ உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

திரு. மகிந்த அவர்கள் நிலைபேறான அபிவிருத்திப் பேரவையின் தலைவர், நாணயக் கொள்கைக் குழு மற்றும் மத்திய வங்கியின் சந்தை நடவடிக்கைக் குழுவின் தலைவர் மற்றும் இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கி சிலோன் பிஎல்சி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உள்ளிட்ட பல நிறுவனங்கள் / திறைசேரி ஆகியவற்றின் குழுக்களிலும் பணிப்பாளர் சபைகளிலும் உறுப்பினராகவும் பிரதிநிதியாகவும் பல்வேறுபட்ட பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

திரு. மகிந்த அவர்கள், அமெரிக்காவின் வாண்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலை (MA) பட்டத்தையும் பொருளாதார அபிவிருத்தியில் முதுகலை டிப்ளோமா மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலை (BA) (சிறப்பு) பட்டங்களையும் பெற்றுள்ளார்.

↘ ரியாஸ் மிஹிலார்

திரு. ரியாஸ் மிஹிலார் அவர்கள் தற்போது பைரஹா பார்ம் லிமிடட் இன் தலைவராக செயற்படுவதுடன் நெஸ்லே லங்கா பிஎல்சீ மற்றும் எகிலிடி இன்னொவேசன் (பிரைவட்) லிமிடட் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளில் பணியாற்றுகிறார். அவர் அதற்கு முன்னர் KPMG இலங்கை மற்றும் மாலைதீவுகளின் நிர்வாகப் பங்காளராகவும், KPMG மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியாவின் தலைவராகவும், KPMG இன் ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா (EMA) சபை உறுப்பினராகவும் மற்றும் KPMG இன்டர்நேஷனல்ஸ் குளோபல் கவுன்சில் உறுப்பினராகவும் பணியாற்றினார்.

அவர் முன்னர் இலண்டனை தளமாகக் கொண்ட சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் குழுவின் பணிப்பாளர் சபையில் 5 ½ ஆண்டுகள் பணியாற்றியதுடன, அங்கு அவர் விவசாயம் தொடர்பான சர்வதேச கணக்கீட்டு நியமம் (IAS 41) உருவாக்கிய வழிகாட்டுதல் குழுவின் தலைவராக இருந்தார். அவர் 2006 ஆம் ஆண்டின் இறுதிவரை 3 ஆண்டுகளுக்கு மறுசீரமைக்கப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் சபையின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார். அவர் நியூயார்க்கை தளமாகக் கொண்ட சர்வதேச நெறிமுறைகள் நியமங்கள் சபையின் (IESBA) பணிப்பாளர் சபையிலும் 6 ஆண்டுகள் பணியாற்றினார்.

திரு. ரியாஸ் அவர்கள் தற்போது இலங்கை மத்திய வங்கியின் பங்குதாரர் ஈடுபாட்டுக் குழுவின் (SEC) உறுப்பினராக பணியாற்றுகிறார்.

ரொஹான் தி சில்வா

திரு. ரொஹான் அவர்கள் இலங்கை சார்ட்டட் இன்ஸ்டிடியூட் ஆ.்.ப் லாஜிஸ்டிக்ஸ் அண்ட் டிரான்ஸ்போர்ட்டின் சக உறுப்பினராக இருப்பதுடன் இங்கிலாந்தின் சிசெஸ்டர் பல்கலைக்கழகத்தில் எம்பிஏ (MBA) பட்டம் பெற்றவர்.

அவர் 75 க்கும் மேற்பட்ட குழுமக் கம்பனிகளை உருவாக்கி வழிநடத்தியுள்ளதுடன் பல்வேறு பிராந்தியங்களில் McLarens குழுமத்திற்கு தலைமை தாங்கியுள்ளர். மேலும் தற்போது McLarens குழுமத்தின் தலைவராக பணியாற்றுகிறார்.

திரு. ரொஹான் அவர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபை, அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழு (பிரைவேட்) லிமிடெட், ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைகள் நிறுவன லிமிடெட், ஜெயா கொள்கலன் டெர்மினல் லிமிடெட் மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் டெர்மினல்ஸ் லிமிடெட் (CICT) ஆகியவற்றின் பணிப்பாளர் ஆவார். அவர் சிலோன் அசோசியேஷன் ஆ.்.ப் ஷிப்ஸ் ஏஜெண்ட்ஸ் ஆலோசனைக் குழு மற்றும் பல நிறுவனங்கள் மற்றும் குழுக்களில் உறுப்பினராக உள்ளார்.
அவர் இலங்கையில் நமீபியா குடியரசின் கௌரவ தூதராகவும் உள்ளார்.

குசான் கொடிதுவக்கு

திரு. குசான் அவர்கள் Orel Corporation இன் முகாமைத்துவப் பணிப்பாளராக இருப்பதுடன், அதன் முதன்மையான பண்டக்குறியான Orange Electric க்கு பெயர் பெற்றவராகவும் 4 கண்டங்களில் இயங்கும் 35000 இற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட 3வது தலைமுறையான இலங்கை குடும்ப வணிகத்திற்கு தலைமை தாங்குகிறார்.

Orel Corp இன் துணை நிறுவனமான Orel IT ஆனது, தன்னியக்க ஓட்டுநர் வாகனங்களுக்கான உலகின் முன்னணி A1 சேவை வழங்குனர்களில் ஒன்றாவதுடன் நாட்டின் மிகப்பெரிய IT தொழிற்துறைகளில் ஒன்றாகும். இது இலங்கையை தொழில்துறை 4.0 க்கு மாற்றுவதற்கான ஒரு வழியாக இருக்கும்.

Orel ஆனது Onebuy மற்றும் அதன் Fin-Tech செயலி Onepay ஐக் காண்பிப்பதன் மூலம் டிஜிட்டல் தொடக்கத்தை முன்னெடுத்ததுடன் தெற்காசியாவிலேயே முதல் ஆளில்லா கடையை Shangri-La மாலில் அறிமுகப்படுத்தியது.

திரு. குஷான் அவர்கள் அமெரிக்காவின் கனெக்டிகட்டில் உள்ள நியூ ஹெவன் பல்கலைக்கழகத்தில் கைத்தொழில் பொறியியலில் பி.எஸ்சி. (B.Sc) பட்டம் பெற்றவர். அவர் இலங்கையின் இளம் தொழில்முனைவோர் சங்கத்தின் தலைவராக பணியாற்றி பல விருதுகள் மற்றும் பாராட்டுக்களுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

ஆணைக்குழு பணிப்பாளர்



Vindhya Weerasekera

Director
Legal &
Corporate Affairs



Ruwan Karunaratne

Director
Finance



Revan Wickramasuriya

Director
Financial Services &
Compliance



Dimantha Kinigama

Director
Commercial & Operations



H C J Thilakarathne

Director
Engineering

ஆணைக்குழு பணிப்பாளர் சுயவிவரங்கள

விந்தியா வீரசேகர

25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட சட்டத்தரணி

திருமதி விந்தியா அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இளங்கலை சட்டப் பட்டம் (LLB), வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வர்த்தக சட்டத்தில் முதுகலைப் பட்டம் (LLM), வாஷிங்டன் DC அமெரிக்காவின் ஆசிய பசிபிக் நிறுவனத்தின் அனுசரணையில் இயங்கும் இலங்கை சட்டக் கல்லூரியில் அறிவுசார் சொத்துரிமை சட்டத்தில் பட்டப்பின் அற்றோனி டிப்ளோமா ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

சட்ட மற்றும் கம்பனி துறைகளிலுள்ள சிரேஷ்ட பதவிகளில் அவருக்கு விரிவான அனுபவம் உள்ளது.

ருவன் கருணாரத்ன

பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுள்ள பட்டயக் கணக்காளர்.

திரு. ருவன் அவர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதித்துறையில் எம்பிஏ (MBA) சிறப்புப் பட்டம் பெற்றவராகவும் பட்டய கணக்காளர் (FCA) ஆகவும், பட்டய வரி ஆலோசகராகவும் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்குகள் நிறுவனத்தின் (ACMA) இணை உறுப்பினராகவும் கசாணப்படுகின்றார்.

அவர் நிதி அறிக்கையிடல், வரி மற்றும் நிதி திட்டமிடல், மத்திய திறைசேரிச் செயல்பாடுகள், பாதீடு மற்றும் எதிர்வுகூறல் ஆகியவற்றில் விரிவான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

ரேவன் விக்கிரமசூரிய

இலங்கை, அவுஸ்திரேலியா, ஆசிய துணைக்கண்டம், மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் 25 வருடங்களுக்கும் மேலான நிதி சேவைகள் துறை அனுபவம்.

திரு. ரேவன் அவர்கள் பட்டய நிதி பகுப்பாய்வு (CFA) USA மற்றும் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் (CIMA) UK ஆகியவற்றின் உறுப்பினராக உள்ளார்.

நிதிச் சந்தைகள், அன்னியச் செலாவணி ஓட்டங்கள் மற்றும் கடன் அபாயங்கள் தொடர்பான இடர்களை நிர்வகிப்பதற்கான தீர்வுகளை உருவாக்குதல், இருதரப்பு மற்றும் பல்தரப்பு நிதியுதவிகளில் தீர்வுகளை வழங்குதல் மற்றும் மத்திய வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பல்வேறு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்கள் உட்பட அரசு நிறுவனங்களுக்கான கொடுப்பனவு சமநிலை மறுசீரமைப்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்.

திமந்த கினிகம

தீர்வையற்ற வியாபாரம் மற்றும் விமானநிலைய வர்த்தகக் கைத்தொழில் துறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

திரு.திமந்த அவர்கள் இங்கிலாந்தில் உள்ள மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் இளங்கலை பட்டம் (BA) பெற்றுள்ளார்.

மத்திய கிழக்கில் தீர்வையற்ற தொழில்துறை மற்றும் இந்திய துணை கண்டத்திலுள்ள முன்னணி உலகளாவிய சில்லறை வர்த்தக நிறுவனங்களின் சிரேஷ்ட பதவிகளில் அவருக்கு விரிவான அனுபவம் உள்ளதுடன், இந்திய துணைக்கண்டத்தில் உலகளாவிய முதன்மையான தீர்வையற்ற நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்ட முதல் இலங்கையர் ஆவார்.

எச் சி ஜே திலகரத்ன

இலங்கை, ஆசியா பசிபிக் மற்றும் வளைகுடா பிராந்தியம் முழுவதும் பொது மற்றும் தனியார் துறைகளில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம்.

அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியலில் இளங்கலைப் பட்டத்தையும் (BSc. Eng. Hons), அடிப்படைப் பொறியியல் மற்றும் பூமியைத் தக்கவைக்கும் முறைமைகளில் முதுகலை டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் நிர்மாணச் சட்டம் மற்றும் சர்ச்சைத் தீர்வு ஆகியவற்றில் பட்டம் பெற்றுள்ளார். இலங்கை பொறியியல் கவுன்சிலில் பதிவு செய்யப்பட்ட பட்டய சிவில் பொறியியலாளர்.

திரு. திலகரத்ன அவர்கள் சிவில் இன்ஜினியரிங், கட்டுமான முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத் துறையில் பரந்த அனுபவத்தைக் கொண்டவர்.

↘ ஆளுகை

ஆணைக்குழுவின் கட்டமைப்பின் அடித்தளமானது வெளிப்படைத்தன்மை, அதிக பொறுப்புக்கூறல், பொறுப்புகள் மற்றும் நிர்வாகக் குழு, தணிக்கைக் குழு மற்றும் கொள்முதல் குழு ஆகியவற்றின் மூலம் தெளிவான அறிக்கையிடல் வழிகளில் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு மற்றும் குழுக்கள், தேவையான இடங்களில் ஆணைக்குழுவிற்கான உத்தி மற்றும் சாலை வரைபடத்தை அமைப்பதற்கு பொறுப்பான ஆலோசகர்களால் உதவப்படுகின்றது. மேலும் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகக் குழுக்கள் மூலோபாயத்தை செயல்படுத்துவதற்கும் இயக்கி செயல்படுத்துவதற்கும் பொறுப்பாக இருந்து மேற்பார்வையைச் செயல்படுத்துகிறது.

பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு

2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 7 இன் படி, சனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்துக்குக் குறையாத மற்றும் ஏழுக்கு மிகைக்காத உறுப்பினர்களை ஆணைக்குழு கொண்டிருக்க வேண்டும். இத்தகைய நியமனங்கள் முதலீடு, நிதி, சட்டம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், வணிகம் அல்லது கணக்கீடு ஆகிய துறைகளில் தொடர்புடைய நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறுப்பினர்களில் ஒரு உறுப்பினரை, ஆணைக்குழுவின் தலைவராக சனாதிபதி நியமிக்கிறார்.

தற்போது, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு 7 ஆணைக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது,

1. தினேஷ் வீரக்கொடி (தலைவர்)
2. கலாநிதி பிரியத் பி விக்ரம (பணிப்பாளர் நாயகம்)
3. சாலிய விக்கிரமசூரிய
4. கே எம் எம் சிறிவர்தன
5. ரியாஸ் மிஹிலார்
6. ரொஹான் தி சில்வா
7. குஷான் கொடிதுவாக்கு

ஆணைக்குழுவின் கூட்டங்கள்

சட்டத்தின்படி, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு ஒரு கலண்டர் மாதத்திற்கு குறைந்தபட்சம் ஒரு கூட்டத்தையேனும் நடத்த வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவின் கூட்டத்திற்கு தேவையான கோரம் 4 உறுப்பினர்களாக இருக்க வேண்டும். 2021 ஆம் ஆண்டில், ஆணைக்குழு பதினைந்து (15) திட்டமிடப்பட்ட கூட்டங்களை நடத்தியதுடன் அனைத்து கூட்டங்களும் Ernst & Young, Pricewaterhouse Coopers, Boston Consulting Group போன்ற ஆலோசகர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தல் ஆய்வுகளின் அடிப்படையில் கொழும்பு துறைமுக நகரத்திற்கான உலகத் தரம் வாய்ந்த விதிமுறைகளை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு நடாத்தப்பட்டன.

பெயர்	நியமனத் திகதி	பதவி	பங்குபற்றுகை/கூட்டங்களின் எண்ணிக்கை
காமினி மாரப்பன சனா.செய. *	2021 மார்ச் 31	தலைவர்	15/15
எஸ். ஆர். ஆட்டிகல்ல **	2021 மார்ச் 31	ஆணைக்குழு உறுப்பினர்	12/15
சாலிய விக்ரமசூரிய	2021 மார்ச் 31	ஆணைக்குழு உறுப்பினர்	14/15
கலாநிதி பிரியத் பி விக்ரம	2021 மார்ச் 31	ஆணைக்குழு உறுப்பினர்	14/15
குசான் கொடிதுவக்கு	2021 மார்ச் 31	ஆணைக்குழு உறுப்பினர்	14/15
ரொஹான் தி சில்வா	2021 மார்ச் 31	ஆணைக்குழு உறுப்பினர்	14/15
ஜெராட் ஒன்தான்ஜீ***	2021 மார்ச் 31	ஆணைக்குழு உறுப்பினர்	10/15

2022 யூலை 15 இல் பதவிவிலகினார்* * 2022 ஏப்ரல் 22 இல் பதவிவிலகினார்* **** 2022 யூலை 12 இல் பதவிவிலகினார்*

பணிப்பாளர் சபை உதவிக் கட்டமைப்புகள்

முகாமைத்துவக் குழு

முகாமைத்துவக் குழுவானது ஆணைக்குழுவின் செயல்பாடுகளை சீராக நடத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயற்படுகின்ற பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட ஆணைக்குழுவின் அனைத்து சிரேஷ்ட பணிப்பாளர்களையும் உள்ளடக்கியுள்ளது. முகாமைத்துவக் குழு வாரந்தோறும் கூடி, வேலைகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து, இடையூறுகளை கண்டறிந்து அவற்றை முன்கூட்டியே தீர்த்துவைக்கின்றது. ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த நோக்கங்களை அடைவதற்காக அன்றாட வேலைகளை வழிநடத்துவது முகாமைத்துவக் குழுவின் பொறுப்பாகும். முகாமைத்துவக் குழுவிலிருந்து எழும் விடயங்கள், தீர்மானமெடுப்பதற்கும் பதிவுசெய்தலுக்கும் என நேரடியாக ஆணைக்குழுவிக்கு தெரிவிக்கப்படுகின்றன.

கணக்காய்வுக் குழு

ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் பிரதிநிதி மற்றும் கணக்காய்வுக் குழுவிற்கான செயலாளரைக் கொண்டதாக கணக்காய்வுக் குழுவை ஆணைக்குழு நிறுவியுள்ளது. கணக்காய்வுக குழுவானது கணக்காய்வுக குழுவிற்கான சாசனத்தை உருவாக்கியுள்ளதுடன், அதில் அதன் நோக்கம் மற்றும் அதிகாரம், கட்டமைப்பு மற்றும் கூட்டங்கள், பொதுவான கடமைகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் சுயாதீன கணக்காய்வாளருக்கான பொறுப்புகள் ஆகியன தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

பெறுகைகள் குழு

ஆணைக்குழுவின் அனைத்து கொள்வனவு நடவடிக்கைகளிலும் அதன் மேற்பார்வை செயற்பாட்டைச் செய்வதற்கு பணிப்பாளர் சபைக்கு உதவுவதன் மூலம், அனைத்து கொள்வனவு முன்மொழிவுகளையும் மதிப்பீடு செய்து அதன் பரிந்துரைகளை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிப்பதே பெறுகைகள் குழுவின் முதன்மைப் பொறுப்பாகும்.

கொழும்பு துறைமுக நகர செயற்திட்டத்தின் வெற்றியானது இலங்கையின் பொருளாதார செழுமைக்கு முக்கியமானதாக உள்ளது. வினைத்திறனான, நியாயமான, சமமான, வெளிப்படையான, போட்டிமிக்க மற்றும் செலவு குறைந்த முறையில் பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஆளுகைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை நிறுவுவதையும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் தேவைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய புதுமையான தீர்வுகளை அபிவிருத்தி செய்வதற்கான திறன்கள் நிறுவப்படுவதையும் நோக்கமாகக் கொண்ட கொள்வனவு வழிகாட்டுதல்களை நிலைநிறுத்த ஆணைக்குழு உறுதிபூண்டுள்ளது.

கம்பனியின் செயலாளர்

கம்பனிச் செயலாளர் ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அதற்கு வழிகாட்டுதலை வழங்குகின்றமையால் ஆணைக்குழுவின் கூட்டங்களின் சிறந்த நம்பகரமான மற்றும் ஒருமைப்பாட்டுத் தேவைகளைப் பராமரிப்பதற்காக ஒரு வெளிவாரி நிறுவன செயலாளர் தேவைப்படுகின்றார்; அவரால் பின்வரும் சேவைகள் ஆற்றப்படுகின்றன. (அ) தலைவருக்கு உதவுதல் மற்றும் தலைவர் மற்றும்∴அல்லது ஆணைக்குழுவின் உறுப்பினருடன் தொடர்பு கொண்ட பிறகு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலை அனுப்புதல், (ஆ) உறுப்பினர்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றுவதையும் செயற்படுத்துவதையும் உறுதி செய்தல், (இ)அனைத்து உத்தியோகபூர்வ ஆவணங்களுக்குமான (தேவைப்பட்டால்) பாதுகாப்பை வழங்குதல் (ஈ) உறுப்பினர்களுக்கு ஆவணங்களை அனுப்புதல், அத்துடன், (இ) தேவைப்பட்டால் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட ஆவணங்களின் அங்கீகாரம் மற்றும் தீர்மானங்கள், கூட்டக்குறிப்புகள் போன்றவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்குதல்.

நிலைபேற்றுத்தன்மை



காலநிலை நெருக்கடிகள், சுற்றுச்சூழல் அழுத்தங்கள், மூலவள சவால்கள் மற்றும் சமூக நனவுகள் ஆகியவற்றால் எழும் சிக்கலான சவால்களை வென்றெடுக்கின்ற நிலைபேற்றுத்தன்மையை நோக்கி உலகம் வழிநடத்தப்படுவதால், நவீன நகரங்களுக்கு நிலைபேற்றுத்தன்மை ஒரு முக்கிய அங்கமாக மாறியுள்ளது.

உலகம் நகரமயமாகி வருவதால், உலகளாவிய நிலைபேற்றுத்தன்மை சவால்களை எதிர்கொள்வதில் நிலைபேறான நகரங்கள் ஒரு முக்கிய அங்கமாக மாறியுள்ளன. ஐ.நா. இன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) இன் கீழுள்ள இலக்கு 11 – நிலைபேறான நகரங்கள் மற்றும் சமூகங்கள் - உலகளாவிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக பாதுகாப்பான, மீள்தன்மை மற்றும் நிலைபேற்றுத்தன்மை உள்ளிட்ட நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளை உருவாக்குவதனை அடையாளம் கண்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்திற்கான நிலைபேற்றுத்தன்மை தூரநோக்கு மற்றும் திட்டமானது உலகளாவிய நிலைபேற்றுத்தன்மை நியமங்களை கடைபிடிக்கும் சிறந்த இலக்குகளில் ஒன்றாக இருக்க வேண்டும்.

எதிர்மறையான சந்தை மற்றும் வர்த்தகக்குறி உணர்வுகளை அகற்றுவதற்கு இலங்கை போராடி வரும் நிலையில், கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்தில் இயங்குவதற்கு பன்னாட்டு நிறுவனங்களை ஈர்க்கும் வகையில், நிலைபேற்றுத்தன்மையின் வலுவான நிலைப்பாட்டுடன் கொழும்பு துறைமுக நகரத்தை திறந்துவைக்கும் என ஆணைக்குழு நம்புகிறது.

நிலைபேற்றுத்தன்மை உபாயம்

தற்போதைய உள்கட்டமைப்பு மற்றும் நிலைபேற்றுத்தன்மை அணுகுமுறையை உள்ளடக்கிய முதல் 5 உலகளாவிய நகரங்களில் சிறந்த நிலைநிறுக்கக்கூடிய ஒரு தரப்படுத்தல் ஆய்வைப் பின்பற்றுவதன் மூலம் நிலைபேற்றுத்தன்மைக்கான மூலோபாயத்தை உருவாக்க ஆணைக்குழு கருதுகிறது:

அ. எரிசக்தி மற்றும் போக்குவரத்து
ஆ. காலநிலை மாற்றம் தழுவல்
இ. நீர் தலைமைத்துவம்
ஈ. கழிவு முகாமைத்துவம்
உ. பல்லுயிர் - நகர்ப்புற சூழலியல்
ஊ. வாழக்கூடிய நகரங்கள்

கொழும்பு துறைமுக நகரமானது அதன் பௌதீக மற்றும் செயற்பாட்டு கட்டமைப்பின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பு தீர்வுகளுடன் இணைந்து முக்கிய நிலைபேற்றுத்தன்மை பிரச்சினைகளை நிவர்த்தி செய்கிறது. நகர்ப்புற வெப்பத் தீவு விளைவைக் குறைத்தல் மற்றும் குறைந்த எரிசக்தி தேவையுடன் வளங்களைத் திறம்படச் செயற்படுத்தும் கலவை-பயன்பாடு, வாழக்கூடிய மற்றும் அணுகக்கூடிய நகரத்தை உருவாக்குவதே இதன் முக்கிய குறிக்கோளாகும்.

ஊபாயங்கள் மற்றும் நிலைபேறான வழிகாட்டுதல் கொள்கைகளை வரையறுப்பதன் மூலம் இது செய்யப்படுகிறது:

நகராக்கல் முறை

இட அமைவு, தொடர்ச்சி, வடிவம் மற்றும் பரிமாணத்தின் தளவமைப்பு, உள்நாட்டு காலநிலைகளைக் கருத்தில் கொண்டு, வளங்களைத் வினைத்திறமையான, வசதியான நுண்பாக காலநிலையுடைய மற்றும் கவர்ச்சிகரமான நகர்ப்புற இடங்களை மேம்படுத்துதல்.


நிலைபேறான நகர்ப்புற வடிவமைப்பு கோட்பாடுகள்

தொடர்ந்து பச்சை-நீல மற்றும் திறந்தவெளிகள் கொண்ட அனைவருக்கும் அணுகக்கூடிய, கவர்ச்சிகரமான திறந்த நகரத்தை மேம்படுத்துதல்.

நிலப் பயன்பாடு, நெரிசல் மற்றும் போக்குவரத்து


கார் சார்ந்திருப்பதைக் குறைத்து நடைபயிற்சி, சைக்கிள் ஓட்டுதல் மற்றும் வினைத்திறனான பொதுப் போக்குவரத்து முறைமையின் மூலம் அணுகலை மேம்படுத்துதல்,

பிரதான போக்குவரத்து உபாய மேலோட்டம்



கொழும்பு துறைமுக நகர பிரதான திட்டமானது, நடைபயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுதல் போன்ற மோட்டார் பொருத்தப்படாத போக்குவரத்து மாதிரிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய நகரப் போக்குவரத்து மாதிரியைத் தலைகீழாக மாற்றுவதன் மூலம், காற்றின் தரத்தில் பாரிய முன்னேற்றம் காணப்படுமென்பதுடன் வெப்பத் தீவு விளைவைக் குறைத்து வாழக்கூடிய நகரத்தின் பணிக்கு பங்களிக்கும்.

இதனை நடைமுறை ரீதியாக யதார்த்தமாக்குவதற்காக, பிரதான திட்டம் பின்வரும் வடிவமைப்புக் கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது:



பசுமை மற்றும் நீல உபாயம்

பசுமை படிநிலை: கொழும்பு துறைமுக நகரத்தின் அபிவிருத்தியில் உயர்தர வாழ்க்கைக்கு உதவுகின்ற மற்றும் சுத்தமான மற்றும் பசுமையான அடையாளத்தை மேம்படுத்துகின்ற பூங்காக்கள் மற்றும் திறந்தவெளிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
பின்வரும் படிநிலையானது நகர மட்டத்தில் வழங்கப்படுமென்பதுடன் வாழக்கூடிய நகரங்களுக்கான சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பொதுமக்கள் திறந்த பொழுதுபோக்கு இடத்தின் (PORS) நியமத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் உள்ளது.

நீல உள்வாங்கல்: ஒரு முக்கிய கடல்சார் இருப்பிடமாக, கொழும்பு துறைமுக நகரத்தின் வடிவமைப்பானது, தண்ணீருடன் நெருங்கிய உறவைக் கொண்ட செயல்பாடுகள் மற்றும் அனுபவங்களை வழங்குகிறது. சலசலப்பான கொழும்பு வணிக மாவட்டம் மற்றும் மெரினா முதல் அமைதியான மற்றும் அண்டை கடற்கரை வரையான தீவு என்பன வாழ்வில் உள்ள அனைத்தையும் அனுபவிக்க தொடர்ச்சியான அணுகலை வழங்குகின்ற, வரலாற்று நகரத்தை நவீன கண்ணோட்டத்துடன் இணைக்கும் ஒரு நீர்முனை ஊர்வலமாகும்.

தண்ணீருடனான தனித்துவமான உறவு, நீர் அனுபவங்களுக்கான வாய்ப்புகளையும், படகுத் தூண்களுடன் கேனோயிங் மற்றும் பேடில் போர்டிங் போன்ற செயல்பாடுகளையும் வழங்குவதுடன், நீர் டாக்ஸி சேவையையும் வழங்குகிறது.



பாதசாரதிகள் மற்றும் பூங்கா இணைப்பாளருக்கான வலைப்பின்னல்

பசுமையான, நிழலாடும் நடைப் பாதைகள் மூலம் நகரம் முழுவதும் பொதுமக்கள் அணுகலை எளிதாக்குதல். பின்வரும் சிறப்பம்சங்கள் அடங்கும்;

- பாதசாரி கடைத்தொகுதி
- பவுல்வர்டு (Boulevard) பசுமை
- பசுமை பாதுகாப்பு

முதற்தர முறைமை

கொழும்பு துறைமுக நகரத்திலுள்ள பாரிய பசுமை தொகுதிகள்.

- மாதிரிப் பூங்கா
- மத்திய பூங்கா
- நேர்வரிசை பூங்கா
- ஆரம்ப பசுமை தொடர்புகள்

இரண்டாந்தர முறைமை

சமூகப் பூங்கா, இரண்டாம்தர பசுமை இணைப்புகள் மற்றும் நீர்ப் பூங்கா உள்ளிட்ட நடுத்தரளவான இடப்பரப்புகள்.

- சமூகப் பூங்கா
- இரண்டாம்தர பசுமை இணைப்புகள்
- நீர்ப் பூங்கா

உள்ளக திறந்த வெளி முறைமை

சிறிய பாக்கெட்டுகள் மற்றும் பெருந்தோட்ட பூங்காக்கள் (அபிவிருத்திப் பொதிகள் சேவை), பகிரப்பட்ட தெருக்கள் மற்றும் பாதுகாப்பு வழிகள் உட்பட.

- பெருந்தோட்ட பூங்காக்கள்
- பகிரப்பட்ட தெருக்கள்
- பாதுகாப்பு வழிகள்

நீர் விளையாட்டு உபாயம்

- நீர் அனுபவங்கள்
- நீர்ப்படகு தரிப்பிடம் மற்றும் டெக்ஸி சேவை

திறந்த வெளிகள்

- வழிகள்
- கடற்கரை
- கடலோரம்

தொழில்நுட்பம்

ஆணைக்குழுவின் தொழில்நுட்ப தூரநோக்கானது உலகின் மிகவும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட, சிறப்புப் பொருளாதார வலயங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதாகும். கொழும்பு துறைமுக நகர விசேட பொருளாதார வலயத்திற்கான (SEZ) தொழில்நுட்ப வரைபடத்தை ஆணைக்குழு வகுத்துள்ளதுடன், இது பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் SEZ க்குள் செயல்படுத்த திட்டமிடப்பட்ட மற்றும் விரும்பிய தொழில்நுட்பங்கள் மற்றும் முன்முயற்சிகளை கோடிட்டுக் காட்டுகிறது. கொழும்பு துறைமுக நகரத்திற்கான தொழில்நுட்ப வரைபடமானது, SEZ க்குள் இயங்கும் வணிகங்களின் தற்போதைய மற்றும் எதிர்கால தொடு புள்ளிகளை கவனத்தில் எடுத்துள்ளது.

தொழில்நுட்ப தூரநோக்கை அடைவதற்காக, தொழில்நுட்ப பெருந்திட்ட வரைபடத்தில் நான்கு முக்கிய பகுதிகளில் ஆணைக்குழு கவனம் செலுத்துகிறது.

1. **டிஜிட்டல் உள்கட்டமைப்பு:** இதில் SEZ-க்குள் இணைப்புகள் மற்றும் பிராட்பேண்ட் அணுகலை மேம்படுத்துவதற்கான முயற்சிகளும், ஸ்மார்ட் சிட்டி தொழில்நுட்பங்களான ஸ்மார்ட் லைட்டிங் மற்றும் டிரா.ஃபிக் முகாமைத்துவ முறைமைகளின் வரிசைப்படுத்தலும் அடங்கும்.
2. **கைத்தொழில் 4.0 தொழில்நுட்பங்கள்:** கொழும்பு துறைமுக நகரத்திரல் இயங்கும் வணிகங்களின் செயலாற்றல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக செயற்கை நுண்ணறிவு, இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் போன்ற கைத்தொழில் 4.0 தொழில்நுட்பங்களை ஏற்று ஒருங்கிணைக்க ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.
3. **சுற்றாடல் நிலைபேற்றுத்தன்மை:** புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் கழிவு குறைப்பு முகாமைத்துவ உத்திகளை செயல்படுத்துதல் போன்ற சுற்றுச்சூழல் நிலைபேற்றுத் தன்மையை மேம்படுத்துவதற்கான முயற்சிகள்.
4. **ஆற்றல் அபிவிருத்தி:** SEZ இல் திறமையான பணியாளர்களைத் தக்கவைத்தல் மற்றும் ஈர்த்தலுக்காக SEZ இல் செயல்படுவதற்கும் அதற்கு வெளியே செயல்படுவதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குவதற்கு ஆணைக்குழு செயல்படுகின்றது. கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களுக்காக சர்வதேச அளவில் புகழ்பெற்ற கல்விக்கூடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைக் கொண்டுவருவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.



↘ கொழும்பு துறைமுக நகரம்

ஓர் விசேட பொருளாதார வலயம்

கொழும்பு துறைமுக நகரம் என்பது இந்தியப் பெருங்கடலுக்கு அருகாமையில் அமைந்துள்ள மத்திய வர்த்தக மாவட்டத்தின் 269 ஹெக்டேர் விரிவாக்கமாகும். துறைமுக நகரம் என்பது இலங்கையின் முதலாவது பிரதான-திட்டமிட்ட நகராக்கல் ஆவதுடன், இது சுர்பானா ஜுரோங் (சிங்கப்பூர்) மற்றும் SWECO (ஸ்வீடன்) ஆகியோரின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்டதாகும். வணிக, குடியிருப்பு, சில்லறை வணிகம், விருந்தோம்பல் மற்றும் பிற பயன்பாடுகளின் அபிவிருத்திகள் முடிந்தவுடன் 178 ஹெக்டேர் பரப்பளவில் சந்தைப்படுத்தக்கூடிய நிலப்பரப்பில் 6.3 மில்லியன் சதுர மீட்டர் பரப்பளவை பெற்றுக்கொள்ள பிரதான திட்டம் எதிர்பார்க்கிறது. நகருக்குள் எந்தவொரு கைத்தொழில் நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படாது.


செயற்திட்டத்திற்கான மொத்த முதலீட்டு அர்ப்பணிப்பு ஏறத்தாழ 1.4 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ஆகும். மறுசீரமைப்பு மற்றும் சாலைகள், பூங்காக்கள், நீர்வழிகள், கடற்கரை போன்ற அனைத்து உள்கட்டமைப்புகளும், ஹாங்காங் மற்றும் ஷாங்காயில் பட்டியலிடப்பட்டுள்ள 500 தலைசிறந்த கம்பனிகளில் ஒன்றான சீனா கம்யூனிகேஷன் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனியின் (CCCC) துணை நிறுவனமான CHEC Port City Colombo (Pvt) Limited (Project Company) மூலம் அபிவிருத்தி செய்யப்படுகிறது.

கொழும்பு துறைமுக நகரம் திட்டமிடப்பட்ட நகரமாக இருப்பதுடன், இது மீட்டெடுக்கப்பட்ட 269 ஹெக்டேர் நிலப்பரப்பில் தீவு வாழ்க்கை, சென்ட்ரல் பார்க் லிவிங், சர்வதேச தீவு, நிதி மாவட்டம் மற்றும் மெரினா என ஐந்து தனித்தனி பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.



DISTINCT PRECINCT PERSONALITIES





ISLAND LIVING

Everyday is a staycation with the sand and sea at your doorstep.

- Medium Density
- City Beach
- Harbour Quay Park
- Cinnamon Park
- Lotus Boulevard
- Villa Living



CENTRAL PARK LIVING

Enjoy nature in the heart of the city. Cycle, run, stroll and picnic in a lush oasis.

- Medium High Density
- The Channel
- Central Park
- Pavilions
- Green Heart
- Open Blocks



INTERNATIONAL ISLAND

Enjoy a wide variety of options for business and leisure.

- Medium Density
- Integrated Resort
- Convention & Exhibition Centre
- International School
- Healthcare Facility
- Entertainment Hub



FINANCIAL DISTRICT

Business and pleasure come together in a world class commercial district.

- High Density
- Grade-A Office Buildings
- Commercial Boulevard
- Linear Park
- CBD Plaza
- Retail Destination



THE MARINA

Promenade among yachts and dine alfresco in the serenity of The Marina.

- Low Density
- Marina Promontory
- Marina Park
- Luxury Residences
- Entertainment and Luxury Retail

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My no	ENR/A/CPCEC/AR/2021	දිනය திகதி Date	2023 சனவரி 17

அதிமேதகு சனாதிபதி

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு இன் 2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நிதிக்கூற்றுக்கள்

அபிப்பிராயம்

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு (ஆணைக்குழு) இன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலத்திற்கான (காலம்) விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய அக் காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் படியான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். இந்த கணக்காய்வை மேற்கொள்வதற்காக பொதுத் தொழிலுள்ள சர்வதேச பட்டயக் கணக்கறிஞர் நிறுவனமொன்றால் எனக்கு உதவப்பட்டது.

ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம்

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுவின் மீது வருமான வரியை பிரயோகிப்பது தொடர்பில் ஆணைக்குழு கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பில் உங்களது கவனத்தை ஈர்க்கின்றேன். இந்த விடயம் காரணமாக எனது அபிப்பிராயம் மாற்றத்திற்கு உட்படுத்தப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்துச் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குழுமம் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் மற்றும் ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் ஆணைக்குழுவின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படாதிருப்பின் அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு
விரிவான வருமானக் கூற்று
2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

	குறிப்பு	2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு ரூபா
வருமான மூலங்கள்	3	48,771,584
நேர் செலவினம்		-
மொத்த மிகை		48,771,584
நிர்வாக செலவினம்		(38,168,906)
மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினம்		(1,582,192)
நிதிச் செலவினம்	4	(157,742)
		(39,908,840)
காலப்பகுதிக்கான மிகை	5	8,862,744
ஏனைய விரிவான வருமானம்		-
மொத்த விரிவான வருமானம்		8,862,744

அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளவை கழித்தல்களாகும்

பக்கங்கள் 35 - 48 வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஓர் பகுதியாகும்

கொழும்பு
2023 சனவரி 13

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு
நிதி நிலைமைக் கூற்று
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

	குறிப்பு	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா
சொத்துக்கள்		
நடைமுறையல்லா சொத்துக்கள்		
பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள்	6	7,813,821
மூலதன முடிவுறா வேலை	7	160,808,037,740
பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள்	8	4,419,896
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்		160,820,271,457
நடைமுறைச் சொத்துக்கள்		
ஏனைய பெறவேண்டியவை	9	2,648,358
காசும் காசுக்கு சமமானவைகளும்	10	49,253
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		2,697,611
மொத்தச் சொத்துக்கள்		160,822,969,068
உரிமைத்துவம் மற்றும் பொறுப்புகள்		
திரண்ட மிகை		8,862,744
அரசாங்க பங்களிப்பு		160,808,037,740
மொத்த உரிமைத்துவம்		160,816,900,484
நடைமுறையல்லாத பொறுப்புகள்		-
நடைமுறைப் பொறுப்புகள்		
ஏனைய செலுத்த வேண்டியவை		1,607,050
குத்தகைப் பொறுப்பு	11	4,461,534
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		6,068,584
மொத்த பொறுப்புகள்		6,068,584
மொத்த உரிமைத்துவம் மற்றும் பொறுப்புகள்		160,822,969,068

அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளவை கழித்தல்களாகும்

பக்கங்கள் 35 - 48 வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஓர் பகுதிய

இந்த நிதிக்கூற்றுக்கள் 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன

மூலம் கையொப்பமிட்டது

திரு. ருவன் எஸ். கருணாரத்ன
பணிப்பாளர் - நிதி

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பது ஆணைக்குழுவின் பொறுப்பாகும்

ஆணைக்குழுவின் சார்பாக அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டது

மூலம் கையொப்பமிட்டது

திரு. ரொஹான் தி சில்வா
ஆணையாளர்

மூலம் கையொப்பமிட்டது

கலாநிதி பிரியத் பந்து விக்ரம
ஆணையாளர்

கொழும்பு
2023 சனவரி 13
SR/dm

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு
உரிமைத்துவத்தில் மாற்றங்கள் கூற்று
2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

	திரண்ட நிதியம்	அரசாங்க பங்களிப்பு	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா
காலப்பகுதியின் ஆரம்பத்திலுள்ளவாறான மீதி	-	-	-
காலப்பகுதிக்கான தேறிய மிகை	8,862,744	-	8,862,744
அரசாங்கத்திடமிருந்து பங்களிப்பு (குறிப்பு 07)	-	160,808,037,740	160,808,037,740
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	8,862,744	160,808,037,740	160,816,900,484

அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளவை கழித்தல்களாகும்

பக்கங்கள் 35 - 48 வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின்

கொழும்பு
2023 சனவரி 13

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு
காசுப் பாய்ச்சல் கூற்று
2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு

	2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்	
காலப்பகுதிக்கான மிகை	8,862,744
சீராக்கல்கள்:	
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு	419,713
பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் காலத்தேய்மானம்	4,419,896
குத்தகை மீதான வட்டி	157,742
தொழிற்படு மூலதன மாற்றங்களிற்கு முன்னர் செயற்பாட்டு மிகை	13,860,095
ஏனைய பெறவேண்டியவற்றில் அதிகரிப்பு	(2,648,357)
ஏனைய செலுத்த வேண்டியவற்றில் அதிகரிப்பு	1,607,050
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு	12,818,788
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு	12,818,788
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்யச்சல்	
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(8,233,535)
முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு	(8,233,535)
நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்	
குத்தகைக் கடன்கொடுத்தோர் கொடுப்பனவு	(4,536,000)
நிதிச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு	(4,536,000)
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு	49,253
காலப்பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசும் காசுக்கு சமமானவைகளும்	-
காலப்பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு அ)	49,253

காலப்பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு அ)	**குறிப்பு அ**
காசு மீதி	49,253
	49,253

அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளவை கழித்தல்களாகும்

பக்கங்கள் 35 - 48 வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின்

கொழும்பு
2023 சனவரி 13

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு

நிதிக் கூற்றுக்களிற்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள

1. கூட்டாண்மைத் தகவல்கள்

1.1 பொதுவானவை

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு ("ஆணைக்குழு") என்பது 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ("சட்டம்") கீழ் நிறுவப்பட்டு இலங்கையில் செயற்படுகின்ற ஒரு ஆணைக்குழுவாகும். ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான வணிக இடம் என்பன 901 ஆம் பிரிவு, One Galle Face Tower, 1A, மத்திய வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

1.2 முக்கிய செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

இந்தக் காலப்பகுதியில், கொழும்பு துறைமுக நகரத்தின் உள்ளேயும் வெளியேயும் வர்த்தகம் மற்றும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பதிவுகள், உரிமங்கள், அங்கீகாரங்கள் மற்றும் ஏனைய ஒப்புதல்களை வழங்குதல் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் வணிகங்கள் மற்றும் முதலீடுகளை எளிதாக்குதல் ஆகியவை ஆணைக்குழுவின் முக்கிய செயல்பாடுகளாகும்.

1.3 வெளியிடுவதற்கு அங்கீகாரமளித்த திகதி

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலத்திற்கான ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களை 2023 சனவரி 13 அன்று வெளியிட ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

1.4 நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பு

IFRS மன்றத்தால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் சட்டத்தின் விதிகளின்படி ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 இணக்கப்பாட்டு அறிக்கை

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலத்திற்கான (காலம்) விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ("நிதிக்கூற்றுக்களின்") முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் குறிப்புக்களையும் உள்ளடக்கிய அக் காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

2.1.2 அளவீட்டின் அடிப்படை

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.3 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், அது செயல்படுகின்ற முதன்மை பொருளாதாரச் சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகிறது (தொழிற்பாட்டு நாணயம்). இந்த நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன. மீளாய்வுக்குட்பட்ட காலத்தின் போது ஆணைக்குழுவின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

2.1.4 பொருண்மை மற்றும் திரட்டல்

ஒத்த விடயங்களைக் கொண்ட ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படுகின்றது. சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களால் அனுமதிக்கப்படுகின்ற ஆனால் பொருண்மையற்றதாக இல்லாத வேறுபட்ட தன்மை அல்லது செயல்பாட்டு உருப்படிகள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

நிகர அடிப்படையில் எதிரீடு செய்வதற்கு அல்லது சொத்துக்களை உணர்ந்து ஒரே நேரத்தில் பொறுப்பைத் தீர்ப்பதற்கு சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருக்கும்போது மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் என்பன எதிரீடுசெய்யப்பட்டு, நிதிக்கூற்றுக்களில் நிகரத் தொகை அறிவிக்கப்படுகின்றது. கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவுகள் என்பன எந்தவொரு கணக்கீட்டு நியமத்தினால் அல்லது விளக்கத்தால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் அன்றி, விரிவான வருமான கூற்றில் எதிரீடு செய்யப்படுவதில்லை.

2.1.5 வெளியிடப்பட்டுள்ள போதிலும் இன்னும் செயற்படுத்தப்படாத புதிய கணக்கீட்டு நியமங்கள், திருத்தங்கள் மற்றும் வியாக்கியாணங்கள்

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் வெளியிடப்படும் தேதி வரை வெளியிடப்பட்டு ஆனால் இதுவரை செயற்படுத்தப்படாத புதிய கணக்கீட்டு நியமங்கள், திருத்தங்கள் மற்றும் வியாக்கியாணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

இந்த திருத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள், திருத்தங்கள் மற்றும் வியாக்கியாணங்கள் பொருத்தமாகக் காணப்படின், அவை நடைமுறைக்கு வரும்போது அவற்றை ஏற்றுக்கொள்ள ஆணைக்குழு விரும்புகிறது.

கணக்கீட்டு நியமம்	விபரம்	அமுலுக்குவரும் திகதி
IAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்	ஒரு ஒப்பந்தம் கடினமானதா அல்லது நட்டத்தை உண்டாக்குகிறதா என்பதை மதிப்பிடும்போது ஒரு நிறுவனம் உள்ளடக்க வேண்டிய கிரயங்களை திருத்தம் குறிப்பிடுகிறது.	2022 சனவரி 01
IAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயம் ஒன்றை நிர்வாகத்தின் நோக்கம் கொண்ட முறையில் செயல்படுத்துவதற்குத் தேவையான இடத்திற்கும் நிலைக்கும் கொண்டு வரும்போது, உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை அந்தச் சொத்தின் கிரயத்திலிருந்து கழிப்பதை இத்திருத்தம் தடை செய்கிறது.	2022 சனவரி 01
தனிப்பட்டதோர் கொடுக்கல் வாங்கல் ஒன்றிலிருந்து எழுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் தொடர்புடைய பிற்போட்ட வரி (IAS 12 இற்கான திருத்தம்)	சமமான மற்றும் தற்காலிக வேறுபாடுகளை ஈடுசெய்யும் கொடுக்கல் வாங்கல்களை விதிவிலக்குச் செய்வதற்கான ஆரம்ப அங்கீகார நோக்கத்தை திருத்தங்கள் குறைக்கின்றன - எ.கா. குத்தகை.	2023 சனவரி 01
IFRS 2018 – 2020 இற்கான வருடாந்த மேம்படுத்தல்கள்	IFRS இற்கான வருடாந்த மேம்படுத்தல்கள்	2022 சனவரி 01
IAS 1இற்கான திருத்தம்	பொறுப்புக்களை நடைமுறை அல்லது நடைமுறையல்லா பொறுப்பாக வகைப்படுத்துதல்	2023 சனவரி 01

கணக்கீட்டு நியமம்	விபரம்	அமுலுக்குவரும் திகதி
IAS 1 மற்றும் SLFRS நடைமுறை அறிக்கை 2 இற்கான திருத்தங்கள்	கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துதல்	2023 சனவரி 01
IAS 8 இற்கான திருத்தங்கள்	கணக்கீட்டு மதிப்பீடுகளிற்கான வரைவிலக்கணம்	2023 சனவரி 01

இந்த திருத்தங்களையும் வியாயக்கியாணங்களையும் சேர்த்துக் கொள்ளல் காரணமாக ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான தாக்கங்கள் எதுவும் ஏற்படுவதில்லை.

2.1.6 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

அ) தீர்ப்புகள்

கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயற்பாட்டில், நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள் மீது மிக முக்கியமான தாக்கத்தைக் கொண்டுள்ள மதிப்பீடுகள் தொடர்பானவை நீங்கலாக, முகாமைத்துவம் ஆணைக்குழு தீர்ப்புகளை மேற்கொண்டது.

ஆ) மதிப்பீடுகளும் எடுகோள்களும்

அடுத்த நிதியாண்டில் கொண்டு செல்லப்படும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவில் பொருண்மையான சீராக்கல்களை ஏற்படுத்தும் கணிசமான இடர்களைக்கொண்ட எதிர்காலம் தொடர்பான பிரதான எடுகோள்கள் மற்றும் நிதி நிலைமைத் திகதியில் காணப்படும் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிடும் பிரதான மூலங்கள் கருத்திலெடுக்கப்பட்டுள்ளன.

2.1.7 தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கிடைக்கக் கூடியதாக இருந்த தகவல்களின் அடிப்படையில், தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை பயன்படுத்தலின் பொருத்தப்பாட்டினை ஆணைக்குழு மதிப்பிட்டது. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தினால் வலியுறுத்தப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் எதிர்பார்க்கக்கூடிய எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கான வளங்கள் தம்மிடம் இருப்பதாக ஆணைக்குழு திருப்தியடைகின்றது.

2.1.8 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

எல்லா வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களும் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் நேரத்தில் நிலவும் செலாவணி வீதத்தில் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன.

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் நிதிசார் சொத்துகளும் பொறுப்புகளும் காலத்தின் இறுதியில் காணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி சமமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படுவதுடன் அதன் விளைவான ஆதாயங்களும் நட்டங்களும் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் நிதிசாராத சொத்துகளும் பொறுப்புகளும் அவற்றின் பெறுமதிகள் தீர்மானிக்கப்படுகையில் காணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி குறிப்பிடப்படுகின்றன. அதன் விளைவான ஆதாயங்களும் நட்டங்களும் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

2.2 சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்

2.2.1 ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

அ) அங்கீகாரம் மற்றும் அளவீடு

அனைத்து ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களும் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பின்னர், தினசரி சேவைக்கான செலவுகளைத் தவிர்த்து, திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் மதிப்பிட்ட திரட்டப்பட்ட காலத்தேய்மானம் ஆகியன கழிக்கப்பட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களானது கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. அந்தக் கிரயம் ஏற்படும் போது அங்கீகார அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டால், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மாற்றுவதற்கான கிரயமும் அத்தகைய கிரயத்தில் உள்ளடக்கப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் இடைப்போக்கில் மாற்றப்பட வேண்டியிருக்கும் போது, ஆணைக்குழு அத்தகைய பகுதிகளை குறிப்பிட்ட பயனுள்ள வாழ்க்கையுடன் தனிப்பட்ட சொத்துக்களாக அங்கீகரித்து அதற்கேற்ப தேய்மானம் செய்கிறது.

ஒரு பெரிய ஆய்வு செய்யப்படும் போது, அங்கீகார அளவுகோல்கள் திருப்திகரமாக இருந்தால், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை முன்கொண்டு செல்லும் தொகையில் அதன் கிரயம் அங்கீகரிக்கப்படுகிறது. ஏனைய அனைத்து பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் அவை ஏற்படுகையில் மிகை அல்லது பற்றாக்குறையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள வாழ்க்கை

பெறுமதிகள், விகிதங்கள் மற்றும் முறைகளின் மதிப்பீட்டின் போது தொழில்முறை நிபுணத்துவத்தின் அடிப்படையில் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட தீர்ப்புகளின் மூலம் ஆணைக்குழு ஒவ்வொரு அறிக்கை தேதியிலும் சொத்துக்களின் எஞ்சிய மதிப்புகள், பயனுள்ள வாழ்க்கை காலம் மற்றும் தேய்மான முறைகளை மதிப்பாய்வு செய்கிறது.

தேய்மானம்

ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயமொன்றின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை காலத்தின் அடிப்படையில் நேர்கோட்டு முறையின் அடிப்படையில் விரிவான வருமான அறிக்கையில் தேய்மானம் அங்கீகரிக்கப்படுகிறது, ஏனெனில் இந்த முறையானது சொத்தின் எதிர்கால பொருளாதார நன்மைகளின் நுகர்வு முறையை மிக நெருக்கமாக பிரதிபலிக்கிறது என்பதனாலாகும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பொருளாதார பயனுள்ள வாழ்க்கை காலம் பின்வருமாறு:

	ஆண்டுகள்
தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்	05
அலுவலக உபகரணங்கள்	05
கணினி மற்றும் உபகரணங்கள்	04

சொத்துக்களின் தேய்மானம், அது பயன்பாட்டிற்குக் கிடைக்கும்போது தொடங்குவதுடன் சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது என வகைப்படுத்தப்பட்ட தேதியின் முந்தைய தேதியிலும், அந்தச் சொத்து அங்கீகாரம் நீக்கப்பட்ட தேதியிலும் தேய்வுசெய்தல் நிறுத்தப்படும்.

ஆ) மறுசீரமைப்பு செலவுகள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பழுதுபார்ப்பு அல்லது பராமரிப்பிற்காகச் செய்யப்படும் கிரயங்கள், ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயல்திறனிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதாரப் நலன்களை மீட்டெடுப்பதற்கு அல்லது பராமரிப்பதற்காக ஏற்படும் கிரயமாக அங்கீகரிக்கப்படுகிறது.

இ) அங்கீகார நீக்கம்

ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயமொன்று அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அங்கீகாரம் நீக்கப்படுகின்றது. சொத்தின் அங்கீகாரத்தை இரத்து செய்வதால் ஏற்படுகின்ற நிகர அகற்றல் வருமானத்திற்கும் முன் எடுத்துச் செல்லும்

தொகைக்கும் இடையே உள்ள ஏதேனும் வித்தியாசம் ஆதாயம் அல்லது நட்டம் என கணக்கிடப்படுகிறது.

FF) முடிவுறாத மூலதன வேலைகள்

நடைபெற்று வருகின்ற மூலதன வேலைகள் என்பது, புனரமைப்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்கும் முடிப்பதற்கும் செயற்திட்டக் கம்பனி இது வரை செய்த செலவினங்களைக் குறிக்கிறது. மறுசீரமைப்பு பணிகளுக்கான செலவில், அறிக்கையிடல் தேதியின்படி செயற்திட்ட கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் அடங்கும், சந்தைப்படுத்தக்கூடிய நிலப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட விகிதாச்சார செலவு தவிர, அத்தகைய உரிமைகள் நிறுத்தப்படும் வரை அனைத்து பொருளாதார நன்மைகளையும் அனுபவிக்க செயற்திட்ட கம்பனிக்கு உரிமை உள்ளது.

மறுசீரமைப்புப் பணிகளின் பூரணப்படுத்தல் சான்றிதழைப் பெற்றவுடன், நடைபெற்றுவருகின்ற மூலதன வேலைகள் IAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் என்ற நியமத்தின் தேவைப்பாட்டின் படி குறித்த ஆதனம், பொறி மற்றும் உபகரண வகைகளின் கீழ் மூலதனமாக்கப்படுகின்றது.

2.2.2 குத்தகைகள்

ஒரு ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் அது ஒரு ஒப்பந்தமா அல்லது குத்தகையை உள்ளடக்கியதா என்பதை ஆணைக்குழு மதிப்பிடுகிறது. பரிசீலனைக்கு அமைய, அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்பந்தம் தெரிவிக்குமாயின் அது குத்தகையாகும்.

அ) குத்தகைதாரராக ஆணைக்குழு

குறுகிய கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியுள்ள சொத்துகளின் குத்தகைகள் தவிர, அனைத்து குத்தகைகளுக்கும் ஒரே அங்கீகார மற்றும் அளவீட்டு அணுகுமுறையை ஆணைக்குழு பயன்படுத்துகிறது. குத்தகைக் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக குத்தகைப் பொறுப்புகள் மற்றும் அடிப்படை சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமைச் சொத்துக்களை ஆணைக்குழு அங்கீகரிக்கிறது.

ஆ) பயன்படுத்துவதற்கான உரிமை சொத்துக்கள்

குத்தகையின் தொடக்கத் தேதியில் (அதாவது, அடிப்படைச் சொத்து பயன்பாட்டிற்குக் கிடைக்கும் தேதி) பயன்படுத்துவதற்கான உரிமைச் சொத்துகளை ஆணைக்கணக்குழு அங்கீகரிக்கிறது. பயன்படுத்துவதற்கான உரிமைச் சொத்துக்கள் அவற்றின் தேய்மானம் மற்றும் காலக்கழிவு என்பன கழிக்கப்பட்டு கிரயத்தில் அளவிடப்பட்டு, குத்தகைப் பொறுப்புகளின் மறு அளவீடுகளுக்கு சீராக்கப்படுகிறது. பயன்பாட்டிற்கான உரிமைச் சொத்துகளின் கிரயமானது அங்கீகரிக்கப்பட்ட குத்தகைப் பொறுப்புகளின் அளவு, ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் தொடக்கத் தேதியில் அல்லது அதற்கு முன் செய்யப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் ஏதேனும் பெறப்பட்ட குத்தகை ஊக்கத்தொகைகளை உள்ளடக்குகின்றது. பயன்பாட்டிற்கான உரிமை சொத்துக்கள் குத்தகை காலத்தின் குறுகிய காலத்திலும் சொத்துகளின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுளிலும் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் குறைத்தெழுதப்படுகின்றன. பயன்பாட்டு உரிமை சொத்துக்கள் கழிவு நட்டத்திற்கு உட்பட்டவையாகவும் காணப்படுகின்றன.

சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான ஆணைக்குவிற்குள்ள உரிமை மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 8 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.2.3 நிதியல்லாத சொத்துக்களின் காலக்கழிவு

ஒவ்வொரு அறிக்கையிடும் தேதியிலும் ஒரு சொத்து காலக்கழிவடையக்கூடும் என்பதற்கான அறிகுறி உள்ளதா என்பதைக் கண்டறிய ஆணைக்குழு மதிப்பீடொன்றை செய்கிறது. அத்தகைய அறிகுறி காணப்பட்டால் அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த காலக்கழிவு பரிசோதனை தேவைப்படும் போது,

சொத்தின் தேறக்கூடிய தொகையை ஆணைக்குழு மதிப்பிடுகிறது. ஒரு சொத்தின் தேறக்கூடிய தொகை என்பது அந்த சொத்து மற்ற சொத்துக்களில் இருந்து அல்லது சொத்துக்களின் குழுமத்திலிருந்து பெருமளவில் சுயாதீனமான காசு உட்பாய்ச்சலை உருவாக்கவில்லை என்றால் அச்சொத்தின் சந்தைப் பெறுமதி அல்லது காசு உருவாக்கத்திற்கான நியாயமான பெறுமதியிலிருந்து அதனை விற்பனை செய்வதற்கான செலவுகள் மற்றும் பயன்பாட்டில் உள்ள அச்சொத்து விடயத்தின் பெறுமதியை கழிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு சொத்தின் முன்கொண்டு செல்லும் தொகையானது அதன் தேறக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால், அத்தொகை சொத்தின் நட்டக்கழிவாக கருதப்படுவதுடன் அதன் தேறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படும். பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடுகையில் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள், பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்துக்கான இடர் ஆகியவற்றின் தற்போதைய சந்தை மதிப்பீட்டைப் பிரதிபலிக்கின்ற வரிக்கு முந்தைய கழிவீட்டு விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவீடு செய்யப்படுகிறது.

தொடர்ச்சியான செயல்பாடுகளின் பெறுமதி இழப்புகள், கழிவுநட்டச் சொத்தின் செயல்பாட்டிற்கு இணங்க, விரிவான வருமான கூற்றிலுள்ள அந்த செலவு வகைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2.2.4 நிதி சொத்துக்கள்

IFRS 9-ன் நோக்கெல்லைக்குட்பட்ட நிதிச் சொத்துக்கள் - நிதிக் கருவிகளானது ஏனைய விரிவான வருமானம் (FVOCI) இன் ஊடான நியாயமான பெறுமதி மற்றும் மிகை அல்லது பற்றாக்குறையின் ஊடான நியாயமான பெறுமதியின் காலத்தேய்மானக் கிரயம் என வகைப்படுத்தப்படுகின்றன.

ஆரம்ப அங்கீகாரத்தில் நிதிச் சொத்துக்களின் வகைப்பாடானது நிதிச் சொத்தின் ஒப்பந்தக் காசோட்டப் பண்புகள் மற்றும் அவற்றை நிர்வகிப்பதற்கான ஆணைக்குழுவின் வணிக மாதிரியைப் பொறுத்ததாகும். இந்த மதிப்பீடு SPPI பரிசோதனை என குறிப்பிடப்படுவதுடன் கருவி மட்டத்தில் இது செய்யப்படுகிறது. வணிக மாதிரியானது, ஒப்பந்தக் காசோட்டத்தை சேகரிப்பதாலோ, நிதிச் சொத்துக்களை விற்பதாலோ அல்லது இரண்டின் மூலமாகவோ காசோட்டம் ஏற்படுமா என்பதைத் தீர்மானிக்கிறது. குறிப்பிடத்தக்க நிதியுதவி கூறுகள் இல்லாத அல்லது ஆணைக்குழு நடைமுறைச் சலுகையைப் பயன்படுத்திய வியாபார பெறவேண்டியவற்றைத் தவிர்ந்த ஏனையவை கொடுக்கல் வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன.

ஆணையக்குழுவின் நிதிச் சொத்துக்களில் காசும் காசுக்கு சமமானவை மற்றும் பிற பெறத்தக்கவைகள் என்பன அடங்கும். அந்த நிதிச் சொத்துக்கள் காலத்தேய்மானத்திற்கு உட்பட்ட நிதிச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதி சொத்துக்கள்

இந்த சொத்துக்கள் முக்கியமாக வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதிலிருந்து எழுகின்றன (வர்த்தகம் மற்றும் பிற பெறத்தக்கவைகள்). ஆனால், ஏனைய வகை நிதிச் சொத்துக்களை ஒருங்கிணைத்து, ஒப்பந்த காசோட்டங்களை சேகரிப்பதற்காக இந்த சொத்துக்களை வைத்திருப்பது நோக்கமாக உள்ளதுடன் அசல் மற்றும் வட்டி செலுத்துதல் ஆகிய ஒப்பந்த காசோட்டங்களை மாத்திரமே இவை கொண்டிருக்கும். அவை ஆரம்பத்தில் நியாயமான மதிப்பு மற்றும் பரிவர்த்தனை செலவுகள் ஆகியவற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன, அவை அவற்றின் கையகப்படுத்தல் அல்லது வெளியீட்டிற்கு நேரடியாகக் காரணமாகும், பின்னர் அவை காலத்தேய்மான ஒதுக்கீட்டிற்காக பயனுள்ள வட்டி விகித முறையைப் பயன்படுத்தி காலக்கழிவு செய்யப்படுகின்றன.

2.2.4.1 அங்கீகார நீக்கம்

ஆணைக்குழுவானது நிதிச் சொத்தை பின்வரும் நிலைமைகளில் மட்டுமே அங்கீகரிக்கிறது:

அ) நிதிச் சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகின்ற போது, அல்லது

ஆ) இது நிதிச் சொத்தை மாற்றுகின்ற மற்றும் பரிமாற்ற அங்கீகாரத்தை நீக்குவதற்கு தகுதி பெறுகின்ற போது.

நிதிச் சொத்தின் காசோட்டத்தை பெறுவதற்கான ஒப்பந்த உரிமைகளை மாற்றினால் அல்லது நிதிச் சொத்தின் காசோட்டத்தை பெறுவதற்கான ஒப்பந்த உரிமைகளைத் தக்க வைத்துக் கொண்டால் மட்டுமே, ஒரு ஏற்பாட்டில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெறுநர்களுக்கு காசோட்டம் ஏற்படுகின்றது என்ற அடிப்படையில் நிதிச் சொத்தை ஆணைக்குழு மாற்றுகிறது.

ஆணைக்குழு ஒரு நிதிச் சொத்தை மாற்றும் போது, அந்த நோக்கத்திற்காக நிதிச் சொத்தின் உரிமையின் ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை அது எந்த அளவிற்குத் தக்க வைத்துக் கொண்டுள்ளது என்பதை ஆணைக்குழு மதிப்பிடுகிறது:

அ) நிதிச் சொத்தின் உரிமையின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை ஆணைக்குழு கணிசமாக மாற்றினால், ஆணைக்குழு நிதிச் சொத்தை அங்கீகரிக்காதிருப்பதுடன் பரிமாற்றத்தில் உருவாக்கப்பட்ட அல்லது தக்கவைக்கப்பட்ட எந்தவொரு உரிமைகள் மற்றும் கடமைகளையும் தனித்தனியாக சொத்துக்கள் அல்லது பொறுப்புகளாக அங்கீகரிக்கிறது.

ஆ) நிதிச் சொத்தின் உரிமையின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை ஆணைக்குழு கணிசமாகத் தக்க வைத்துக் கொண்டால், ஆணைக்குழு நிதிச் சொத்தை தொடர்ந்து அங்கீகரிக்கும்.

இ) நிதிச் சொத்தின் உரிமையின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வெகுமதிகளை ஆணைக்குழு மாற்றவோ அல்லது தக்கவைக்கவோ இல்லை என்றால், நிதிச் சொத்தின் கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறதா என்பதை ஆணைக்குழு தீர்மானிக்கிறது.

2.2.5 நிதிசார்ந்த பொறுப்புக்கள்

நிதி பொறுப்புகளின் வகைப்படுத்தல்

ஆணைக்குழுவின் நிதிப் பொறுப்புகளில் நிதிப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்படுகின்ற குத்தகைப் பொறுப்புகள் மற்றும் பிற செலுத்த வேண்டியவைகள் அடங்கும்.

காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்பட்ட நிதிப் பொறுப்புகள்

மிகை அல்லது பற்றாக்குறையின் ஊடாக நியாயமான பெறுமதியில் அளவிடப்படுவதைத் தவிர்ந்த ஏனைய நிதிப் பொறுப்புக்கள் காலத்தேய்மானக் கிரயத்திலுள்ள நிதிப் பொறுப்பாக அளவிடப்படுகிறது. நிதிப் பொறுப்பின் வெளியீட்டிற்கு நேரடியாகக் காரணமாகின்ற கழிவு நீக்கப்பட்ட கிரயத்திலுள்ள நிதிப் பொறுப்பொன்று ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் குறைவான பரிவர்த்தனை செலவில் அளவிடப்படுகிறது. ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு, பயனுள்ள வட்டி விகித முறையின் அடிப்படையில் நிதிப் பொறுப்பு காலக்கழிவுக் கிரயத்தில் அளவிடப்படுகிறது.

2.2.5.1 இனங்காணாதிருத்தல்

கடப்பாடு விடுவிக்கப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது காலாவதியாகும் போது நிதிசார்ந்த ஒரு பொறுப்பு இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. ஏற்கெனவேயிருக்கின்ற நிதிசார்ந்த ஒரு பொறுப்பு கணிசமான வித்தியாசமான அளவுகளில் அதே கடன் கொடுத்த தரப்பிடமிருந்து மற்றொரு தரப்பினால் அல்லது ஏற்கெனவேயிருக்கின்ற ஒரு பொறுப்பின் அளவுகளில் பிரதியிடப்படுகின்ற போது அத்தகையவைகள் மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. அத்தகைய ஒரு மாற்றம் அல்லது திருத்தம் ஆரம்ப பொறுப்பில் இனங்காணாது விட்டுவிடப்படும் ஒரு செயலாக கருதப்படும். புதிய ஒரு பொறுப்பின் இனங்காணல் மற்றும் அந்தந்த கொணரப்படும் தொகைகளிலுள்ள வித்தியாசம் என்பன வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

2.2.6 நிதிசார்ந்த கருவிகளை எதிரீடுசெய்தல்

இனங்காணாது விட்டுவிடப்பட்ட தொகைளை சமப்படுத்தும் பொருட்டு தற்போது நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டமுறையான உரிமை அல்லது அதே சமயத்தில் சொத்துக்களையும் மற்றும் பொறுப்புக்களையும் ஒரு நிகர அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான அல்லது உணரச்செய்வதற்கான ஒரு எண்ணம் இருந்தால் அல்லது இருக்கின்ற நேரத்தில் மாத்திரம் நிதிசார்ந்த சொத்துக்களும் மற்றும் நிதிசார்ந்த பொறுப்புக்களும் சமப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்றில் பதியப்படுகின்றன.

2.2.7 நிதிக் கருவிகளின் நியாயமான பெறுமதி

ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியிலும் செயலில் உள்ள சந்தைகளில் வர்த்தகம் செய்யப்படும் நிதிக் கருவிகளின் நியாயமான பெறுமதிகள், மேற்கோள் காட்டப்பட்ட சந்தை விலைகள் அல்லது விநியோகத்தர் விலை மேற்கோள்கள் (நீண்ட நிலைகளுக்கான ஏல விலை மற்றும் குறுகிய நிலைகளுக்கான விலையைக் கேட்பது), கொடுக்கல் வாங்கல் செலவுகளுக்கு எந்தக் கழிவும் இல்லாமல் தீர்மானிக்கப்படுகிறது. செயலில் உள்ள சந்தையில் வர்த்தகம் செய்யப்படாத நிதிக் கருவிகளுக்கு, பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி நியாயமான மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது. இத்தகைய நுட்பங்கள் கணிசமாக ஒரே மாதிரியான மற்றொரு கருவியின் தற்போதைய நியாயமான மதிப்பு பற்றிய குறிப்பு; தள்ளுபடி செய்யப்பட்ட பணப்புழக்க பகுப்பாய்வு அல்லது பிற மதிப்பீட்டு மாதிரிகள் போன்ற சமீபத்திய சந்தை கொடுக்கல் வாங்கல்களை பயன்படுத்துவதை உள்ளடக்கியிருக்கலாம்.

2.2.8 ஏனைய பெறவேண்டியவை

நுட்டக் கழிவுக்கான படியினை கழித்த பின்னர் மதிப்பிடப்பட்ட தேறிய தொகையில் ஏனைய பெறவேண்டியவைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. நட்டக் கழிவுக்கான கொடுப்பனவின் அளவு விரிவான வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.2.9 காசும் காசுக்கு சமமானவைகளும்

காசும் காசுக்கு சமமானவைகளும் என்பதில் கையில் உள்ள காசும் வங்கியிலுள்ள காசும் உள்ளடக்கப்படுகின்றன என வரையறுக்கப்படுவதுடன், அவை அதிக திரவத்தன்மை கூடிய முதலீடுகள் மற்றும் பெறுமதியில் சிறிய மாற்றம் ஏற்படுவதற்கான ஆபத்துக்கு உட்பட்ட உடனடியாக காசாக மாற்றக்கூடியவை என அறியப்பட்டவையாகும்.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசும் காசுக்கு சமமானவைகள் என்பதில் கையில் உள்ள பணம், வங்கியிலுள்ள பணம் மற்றும் மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான அதிக திரவத்தன்மை கொண்ட வட்டி-தாங்கும் பிணைப்பத்திரங்கள் மற்றும் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்று ஆகியவை அடங்கும்.

காசுப் பாய்ச்சல் கூற்றினாது நேரில் முறையின் அடிப்படையில் அறிக்கையிடப்படுகிறது.

2.3 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

2.3.1. ஏனைய செலுத்த வேண்டியவை

ஏனைய செலுத்த வேண்டியவைகள் வணிகத்தின் சாதாரண போக்கில் பெறப்பட்ட சேவைகளுக்கு செலுத்த வேண்டிய கடப்பாடுகளாகும். அவற்றுக்கு ஒரு வருடம் அல்லது அதற்கும் குறைவான காலத்திற்குள் பணம் செலுத்த வேண்டுமாயின் அவை நடப்பு பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுவதுடன் அவ்வாறு இல்லையெனில் அவை நடப்பு அல்லாத பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

ஏனைய செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் தாக்கமுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி கழிவீட்டுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. கழிவீட்டின் விளைவு முக்கியமற்றதாக காணப்பட்டால், குறிப்பிட்ட வட்டி விகிதம் இல்லாத குறுகிய கால செலுத்த வேண்டியவை உள்ளபடியான பட்டியல் தொகையில் அளவிடப்படுகிறது.

2.3.2. பதவியணியினர் நலன்கள்

அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி

ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்புகளுக்காக அந்தந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப பணியாளர்கள் தகுதியுடையவர்கள் ஆவர்.

ஆணைக்குழு அதன் ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் முறையே 12% மற்றும் 3% த்தை ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு வழங்குகிறது.

2.3.3. வருமான வரி

கொழும்பு துறைமுக நகரம் என்பது 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சட்டத்தால் ("சட்டம்") அடையாளம் காணப்பட்ட ஒரு சிறப்புப் பொருளாதார வலயம் (SEZ) ஆவதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், வேலைவாய்ப்புகளின் உருவாக்கம், அரசாங்க வருவாய், மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்பு மற்றும் சென்மதி நிலுவை ஆகியவற்றின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு வலயமாகவும் காணப்படுகின்றது. ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடானது கொழும்பு துறைமுக நகரத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும் வணிகங்கள் மற்றும் இதர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பதிவுகள், உரிமங்கள், அங்கீகாரங்கள் மற்றும் இதர அனுமதிகளை வழங்குதல் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் வணிகங்கள் மற்றும் முதலீடுகளை எளிதாக்குதல் என்பனவாகும். எனவே, வருமானம் ஈட்டும் நோக்கம் எதுவும் இதற்கு இல்லை.

சட்டத்தின் பிரிவு 23 (2) (இ) இன் படி, கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் அமைந்துள்ள அரசாங்க சந்தைப்படுத்தக்கூடிய நிலம் மற்றும் செயற்திட்ட கம்பனிக்குரிய சந்தைப்படுத்தக்கூடிய நிலத்தின் ஏதேனும் குத்தகையிலிருந்து பெறப்பட்ட அனைத்துத் தொகைகளும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியத்திற்கு ("நிதி") செலவு வைக்கப்பட வேண்டுமென்பதுடன் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, குத்தகையின் அந்தந்த ஒப்பந்தங்களைச் செயல்படுத்தும் அதே நேரத்தில், அனுமதிக்கப்பட்ட செலவினங்களைக் கழித்த பிறகு, எஞ்சிய தொகை ஒருங்கிணைந்த நிதிக்கு அனுப்பப்பட வேண்டும். மேலும், சட்டத்தின் பிரிவு 23 (2) (ஈ) இன் படி, கொழும்பு துறைமுகத்தின் நகர அதிகாரப் பகுதிக்குள் நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணங்களை உள்நாட்டு மதிப்பீட்டு விகிதங்கள் மற்றும் ஆணைக்குழுவால் விதிக்கப்படும் வேறு ஏதேனும் வரிகள் மூலமான அனைத்துத் தொகைகளையும் நிதியத்திற்கு பெறப்படலாம். இது காலாண்டு அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு அரசாங்க வருவாயின் ஒரு பகுதியாக காணப்படும்.

எனவே, சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட முதலீட்டு உதவிச் சேவைகளை வழங்குவதில் பெறப்பட்ட மற்றும் பெறப்பட வேண்டிய அனைத்துத் தொகைகளையும் சேகரிப்பதற்கான பாதுகாவலராக அரசாங்கத்தின் சார்பில் நிதியம் ஒன்று பராமரிக்கப்படுவதுடன் ஆணைக்குழுவின் செலவினங்களை செய்வதற்கு மாத்திரமே நிதியத்தில் இருந்து பணத்தை எடுக்கலாம்.

மேற்கூறியவற்றிற்கு இணங்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு வருமான வரி செலுத்துவதற்கு பொறுப்பாகாது என்று ஆணைக்குழு கருதுகிறது, ஏனெனில் இது அரசாங்க வருவாயின் ஒரு பகுதியாகவும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கு செலுத்தப்படுவதனாலாகும்.

2.3.4 குத்தகை பொறுப்புகள்

குத்தகையின் தொடக்கத் தேதியில், குத்தகைக் காலத்தில் செய்யப்படும் குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்படும் குத்தகைப் பொறுப்புகளை ஆணைக்குழு அங்கீகரிக்கிறது. நிலையான கொடுப்பனவுகளிலிருந்து பெறத்தக்க குத்தகை ஊக்கத்தொகைகள், குறியீட்டு அல்லது விகிதத்தைப் பொறுத்து மாறுபடும் குத்தகைக் கொடுப்பனவுகள் ஆகியவை கழிக்கப்பட்ட தொகையினை குத்தகைக் கொடுப்பனவுகள் உள்ளடக்கியுள்ளது.

குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய மதிப்பைக் கணக்கிடுகையில், குத்தகை தொடக்கத் தேதியில் காணப்படுகின்ற அதிகரிக்கும் கடன் விகிதத்தை ஆணைக்குழு பயன்படுத்துகிறது, ஏனெனில் குத்தகையில் மறைமுகமாக உள்ள வட்டி விகிதத்தை உடனடியாகத் தீர்மானிக்க முடியாது என்பதனாலாகும். தொடக்கத் தேதிக்குப் பிறகு, குத்தகைப் பொறுப்புகளின் அளவு வட்டியின் அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டு, குத்தகைக் கொடுப்பனவுகளுக்கு ஏற்ப

குறைக்கப்படுகிறது. அத்துடன், அதற்கு ஏதேனும் மாற்றம், குத்தகைக் காலத்தில் மாற்றம், குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றம் (எ.கா., குறியீட்டு அல்லது விகிதத்தில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக எதிர்காலக் கொடுப்பனவுகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாற்றங்கள்) காணப்பட்டால், குத்தகை கொடுப்பனவுகளிற்கான குத்தகைப் பொறுப்புகளின் முன்கொண்டு செல்லும் அளவு மீண்டும் அளவிடப்படுகிறது. குத்தகை பொறுப்புகள் மற்றும் அது தொடர்பான வெளிப்பாடுகள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 12 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.3.5 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டைக் கொண்டிருக்கும் போதும் கடனைத் தீர்ப்பதற்கு வளங்களின் வெளியேற்றம் தேவைப்படுகின்ற; மற்றும் தொகை நம்பகத்தன்மையுடன் மதிப்பிடப்பட முடிகின்ற போதிலும் ஆணைக்குழு ஏற்பாடுகளை அங்கீகரிக்கின்றது. எதிர்கால செயற்பாட்டு நட்டங்களிற்காக ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

ஒரே மாதிரியான பல கடப்பாடுகள் இருக்கும் பட்சத்தில், தீர்ப்பதற்கான ஒரு காசு வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதற்கான சாத்தியக்கூறுகள், கடப்பாடுகளின் வகுப்பை முழுவதுமாகக் கருத்தில் கொண்டு ஏற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதே வகைக் கடப்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயத்தின் காசு வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியம் சிறியதாக இருந்தாலும், ஒரு ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகிறது.

2.3.6 கடப்பாடுகள்

அறிக்கையிடல் தேதியில் உள்ள அனைத்து பொருண்மையான கடப்பாடுகளும் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகளில் அடையாளம் காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 விரிவான வருமான கூற்று

2.4.1 வருமான மூலங்கள்

சட்டத்தின் 23 (3) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுவின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கு கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியிலிருந்து பெறப்பட்ட நிதியை வருமான மூலங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

2.4.2 செலவுகள்

அ) செலவினம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது. வணிகத்தின் சாதாரண போக்கில் ஏற்படுகின்ற மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை வினைத்திறனான நிலையில் பராமரிப்பதில் ஏற்படுகின்ற அனைத்து செலவுகளும் அந்தக் காலத்திற்கான பெறுபேற்றை பெறுவதற்காக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆ) நேரடியாகக் காரணமானவை தவிர்ந்த, கணிசமான கால அவகாசம் தேவைப்படும் சொத்துக்களான தகுதிச் சொத்துக்களை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு பெறப்படுகின்ற கடன் செலவுகள் அவை ஏற்படும் காலகட்டத்தில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன. அவற்றின் குறித்துரைத்த நோக்கத்திற்காக தயாராகும் வரை, அல்லது குறித்த சொத்துக்கள் அவற்றின் நோக்கம் அல்லது விற்பனைக்கு கணிசமாக தயாராக இருக்கும் வரை அந்த சொத்துகளின் கிரயத்தில் அச்செலவுகள் சேர்க்கப்படும்.

இ) விரிவான வருமான கூற்றை வழங்குவதற்கு, செலவு முறையின் செயல்பாடுகள் ஆணைக்குழுவின் செயலாற்றல் கூறுகளை நியாயமான முறையில் முன்வைக்கிறது என்பதாக நிறைவேற்றுக் குழுவானது அபிப்பிராயப்டுவதனால், அத்தகைய முன்வைத்தல் முறை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

2.5 அறிக்கையிடல் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்

அறிக்கையிடப்பட்ட தேதிக்குப் பிறகு நிகழும் அனைத்து முக்கிய நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, தேவையான இடங்களில், நிதிக்கூற்றுக்களிற்கான அந்தந்த குறிப்புகளில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

	2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு ரூபா
3. வருமான மூலங்கள்	
நிதியத்திலிருந்து மாற்றல்கள்	48,771,584
	48,771,584
4. நிதிச் செலவினம்	
குத்தகை மீதான வட்டி	157,742
	157,742

5. காலப்பகுதிக்கான மிகை

காலப்பகுதிக்கான மிகையானது பின்வருவன உள்ளிட்ட கசல செலவுகளும் சாட்டப்பட்ட பின்னர் றெப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர் கட்டணம் - கணக்காய்வுச் சேவை	262,040
உயர்தொழில் கட்டணம்	4,366,150
ஆணையாளர்கள் வேதனம்	9,800,000
கணக்கீட்டுக் கட்டணம்	1,210,680
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு	419,713
பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களின் காலத்தேய்மானம்	4,419,896
சட்டக் கட்டணம்	1,460,000

6. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

சொத்துக்களின் விபரம்	கிரயம்			பெறுமானத்தேய்வு			குறை. எழு. பெறு.
	2021.05.27 இல் உள்ள மீதி ரூபா	காலப்பகுயின் போது சேர்த்தல் ரூபா	2021.12.31 இல் உள்ள மீதி ரூபா	2021.05.27 இல் உள்ள மீதி ரூபா	காலப்பகுதி இற்கு உரியவை ரூபா	2021.12.31 இல் உள்ள மீதி ரூபா	2021.12.31 இல் உள்ள மீதி ரூபா
தளபாடம் மற்றும் பொருத்துகள்	-	903,175	903,175	-	226,255	226,255	676,920
அலுவலக உபகரணம்	-	5,591,571	5,591,571	-	52,733	52,733	5,538,838
கணனி உபகரணம்	-	1,738,789	1,738,789	-	140,726	140,726	1,598,063
	-	8,233,535	8,233,535	-	419,714	419,714	7,813,821

7. மூலதன முடிவுறா வேலை

	2021.12.31 இல் உள்ளவாறு ரூபா
காணி மீட்பு வேலைகள்	160,808,037,740
	160,808,037,740

இலங்கை அரசாங்கத்தால் (GOSL) கொடுப்பனவு எதுவும் செலுத்தப்படாது செயற்திட்ட கம்பனியால் 269 ஹெக்டேர் சந்தைப்படுத்தக்கூடிய காணி மீட்டெடுக்கப்பட்டது. செயற்திட்ட கம்பனியால் செய்யப்பட்ட முதலீட்டை அறவிடுவதற்காக சந்தைப்படுத்தக்கூடிய நிலங்கள், பொதுவான பகுதிகள் மற்றும் பிறவற்றை உள்ளடக்கிய 329.99 ஹெக்டேர் சமச்சீரான பரப்பளவை விட்டுவைத்து, 116.1 ஹெக்டேர் (46 காணித்துண்டுகள்) மீட்டெடுக்கப்பட்ட சந்தைப்படுத்தக்கூடிய காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்க, முத்தரப்பு ஒப்பந்தத்தின் (TPA) மூலம் GOSL ஒப்புக்கொண்டது. .

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, இன்னும் இடம்பெற்று வருகின்ற உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் மீட்டெடுத்தல் வேலைகளிற்காக செயற்திட்டக் கம்பனி ஐ.அ. டொலர் 1.0845 பில்லியன் தொகையை செலவிட்டுள்ளது.

பயன்படுத்தத் தயாராக இருக்கும் சொத்துகளாகத் தகுதிபெறும் வரை, அத்தகைய சொத்துக்களின் மீது ஏற்படுகின்ற செலவுகளை செயற்பாட்டுச் சொத்தாக அங்கீகரிக்க முடியாதுள்ளது. எனவே, காணி மீட்பு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஏற்படும் அனைத்து செலவுகளும் "மூலதன முடிவுறா வேலை (CWIP)" என பதிவு செய்யப்பட்டுள்ளது. 116.1 ஹெக்டேர் (46 காணித்துண்டுகள்) தொடர்பான செலவானது, செயற்திட்ட கம்பனிக்கு ஒதுக்கப்பட்ட சந்தைப்படுத்தக்கூடிய நிலத்திலிருந்து எந்தவொரு பொருளாதார நன்மைகளையும் உருவாக்க ஆணைக்குழுவிற்கு உரிமை இல்லை என்ற அடிப்படையில், அந்த சந்தைப்படுத்தக்கூடிய நிலப் பகுதிகளிலிருந்து பொருளாதார நன்மைகளை அனுபவிக்கும் உரிமையை செயற்திட்ட கம்பனி நிறுத்தும் வரை அக் கம்பனிக்கு ஒதுக்கப்பட்ட உள்கட்டமைப்பை நீக்கும் மூலதன வேலையாக 802.3 மில்லியன் அமெரிக்க டாலர்களை (ரூ.160,808,037,740/-) ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது.

8. பயன்பாட்டு உரிமைச் சொத்துக்கள்

	2021.12.31 இல் உள்ளவாறு ரூபா
கிரயம்	
IFRS 16 இன் பிரயோகத்தை சேர்த்தல்	8,839,792
காலத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி	8,839,792
காலத்தேய்மானம்	
காலப்பகுதிக்கு சாட்டுதல்	4,419,896
காலத்தின் இறுதியில் உள்ளவாறான மீதி	4,419,896
தேறிய முன்கொண்டுசெல் தொகை	4,419,896

		2021.12.31 இல் உள்ளவாறு ரூபா
9.	**ஏனைய பெறவேண்டியவை**	
	முற்செலுத்துகை மற்றும் முற்பணங்கள்	2,333,358
	ஏனைய பெறவேண்டியவை	315,000
		2,648,358
10.	**காசும் காசுக்கு சமமானவைகளும்**	
	காசு மீதி	49,253
		49,253
11.	**குத்தகைப் பொறுப்பு**	
11.1	**பயன்பாட்டு உரிமைச் சொத்துகள் மீதான குத்தகைப் பொறுப்பு**	
	மொத்த குத்தகைப் பொறுப்பு	
	IFRS 16 இன் பிரயோகத்தை சேர்த்தல்	9,078,000
	காலத்தில் செலுத்திய கொடுப்பனவுகள்	(4,536,000)
	காலப்பகுதியின் இறுதியிலுள்ள மீதி	4,542,000
	தொங்கல் வட்டி	
	IFRS 16 இன் பிரயோகத்தை சேர்த்தல்	232,208
	காலப்பகுதிக்கான வட்டிக் கட்டணம்	(157,742)
	காலப்பகுதியின் இறுதியிலுள்ள மீதி	74,466
	தேறிய வட்டிப் பொறுப்பு	4,616,466
	ஓராண்டுக்கு பின்னர் பெறவேண்டியவை	-
	ஓராண்டுக்குள் பெறவேண்டியவை	4,461,534
12.	**ஒப்பந்தக் கடப்பாடுகள்**	
12.1	**நிதிசார் கடப்பாடுகள்**	

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு எவ்வித பொருண்மையான நிதிசார் கடப்பாடுகளும் இல்லை.

12.2 மூலதனக் கடப்பாடுகள்

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு எவ்வித பொருண்மையான மூலதனக் கடப்பாடுகளும் இல்லை.

13. நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள்

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு எவ்வித நிகழத்தக்க பொறுப்புக்களோ அல்லது சொத்துக்களோ இல்லை.

14. அறிக்கையிடல் திகதியின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

வெளிநாட்டு நாணய கையிருப்பு குறைதல் மற்றும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் காரணமாக இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதன் விளைவாக, ஏனைய நிறுவனங்களைப் போலவே, எதிர்கால நடவடிக்கைகளுக்கான சவால்களை ஆணைக்குழுவும் எதிர்கொள்கிறது. எவ்வாறாயினும், போதிய நிதியளிப்பு மற்றும் ஆணைக்குழுவின் கடுமையான செலவு முகாமைத்துவத்தை உறுதிசெய்த விவேகமான தீர்மானமெடுத்தல் செயல்முறையின் காரணமாக ஆணைக்குழுவால் நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும் என ஆணைக்குழு நம்பிக்கை கொண்டுள்ளது. ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பலமும் அனுபவமும் ஆணைக்குழுவிற்கு மேலதிக ஆறுதலாக காணப்படுவதுடன், இந்த சவாலான காலகட்டத்தில் தொடர்ச்சியான ஆதரவை இது உறுதி செய்யும். எனவே, இந்த நிதிக்கூற்றுக்களில் அறிவக்கப்பட்டுள்ள மீதிகளுக்கு எந்த சீராக்கமும் தேவைப்படவில்லை.

மேற்குறிப்பிட்டவைக்கு மேலதிகமாக, நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு அறிக்கையிடல் திகதியிலிருந்து எவ்வித நிகழ்வுகளும் ஏற்படவில்லை.

15. நிதிசார் இடர் முகாமைத்துவம்

i. மேலோட்டம்

ஆணைக்குழு அதன் நிதிக் கருவிகளை பயன்படுத்துவதன் காரணமாக பின்வரும் இடர்களை எதிர்கொள்கின்றது.

கடன் இடர்
திரவத்தன்மை இடர்
சந்தை இடர்

மேலே உள்ள ஒவ்வொரு இடர்களுக்கும் ஆணைக்குழுவின் வெளிப்படுத்துகை, ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், இடரை அளவிடுதல் மற்றும் நிர்வகிப்பதற்கான கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் ஆணைக்குழுவின் மூலதன மகாமைத்துவம் பற்றிய தகவல்களை இந்தக் குறிப்பு வழங்குகிறது.

ii. இடர் முகாமைத்துவ செயல்முறை

ஆணைக்குழுவின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பை நிறுவுவதற்கும் மேற்பார்வையிடுவதற்குமான ஒட்டுமொத்த பொறுப்பை நிறைவேற்றுச் சபை கொண்டுள்ளது.

(அ) கடன் இடர்

கடன் இடர் என்பது ஒரு தரப்பினர் அவர்களின் ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றத் தவறினால், அதன் காரணமாக ஆணைக்குழுவிற்கு ஏற்படுகின்ற நிதி இழப்பு ஆபத்தே கடன் இடர் ஆகும். இந்த இடர் முக்கியமாக பெறவேண்டியவைகள் மற்றும் வங்கியில் உள்ள பணத்திலிருந்து ஏற்படுகின்றது.

	முன்கொண்டு செல் தொகை 2021.12.31 இல் உள்ளவாறு ரூபா
காசும் காசுக்கு சமமானவைகளும்	49,253
ஏனைய பெறவேண்டியவை	2,648,358
	2,697,611

15. நிதிசார் இடர் முகாமைத்துவம் (தொடர் ...)

ii. இடர் முகாமைத்துவ செயல்முறை (தொடர்..)

(ஆ) திரவத்தன்மை இடர்

திரவத்தன்மை இடர் என்பது, பணம் அல்லது பிற நிதிச் சொத்தை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகின்ற நிதிப் பொறுப்புகளுடன் தொடர்புடைய கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் ஆணைக்குழு எதிர்கொள்ளும் சிரமத்தைக் குறிக்கிறது. ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புகளை ஏற்படுத்தாமல் அல்லது ஆணைக்குழுவின் நற்பெயருக்கு பங்கம் விளைவிக்காமல், அதன் பொறுப்புகளை எப்போதுமே தீர்ப்பதற்கு போதுமான திரவத்தன்மையை கொண்டிருப்பதை உறுதி செய்வதே திரவத்தன்மையை நிர்வகிப்பதற்கான ஆணைக்குழுவின் அணுகுமுறையாகும்.

பின்வருவன அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் உள்ளவாறான நிதிப் பொறுப்புக்களின் ஒப்பந்த ரீதியான முதிர்ச்சிகளாகும்.

2021 திசெம்பர் 31	முன்கொண்டு செல் தொகை ரூபா	0-6 மாதங்கள் ரூபா	6-12 மாதங்கள் ரூபா
குத்தகைப் பொறுப்பு	4,461,534	2,230,767	2,230,767
ஏனைய செலுத்தவேண்டியவை	1,607,050	1,607,050	-
	6,068,584	3,837,817	2,230,767

(இ) சந்தை இடர்

சந்தை இடர் என்பது, அந்நியச் செலாவணி விகிதங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் போன்ற சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆணைக்குழுவின் வருமானம் அல்லது அதன் நிதிக் கருவிகளின் பெறுமதியை பாதிக்கும் ஆபத்தாகும். சந்தை இடர் முகாமைத்துவத்தின் நோக்கம் யாதெனில், சந்தை இடர் வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுருக்களுக்குள் நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், அதே நேரத்தில் வருமானத்தை மேம்படுத்துதல் ஆகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My no
ENR/A/CPCECF/AR/2021

දිනය
திகதி
Date
2023 சனவரி 17

அதிமேதகு சனாதிபதி

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியத்தின் 2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 23(5) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

நிதிக்கூற்றுக்கள்

அபிப்பிராயம்

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியத்தின் (நிதியம்) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலத்திற்கான (காலம்) வருமான செலவினக் கூற்று, திரண்ட நிதியக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு, நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய அக் காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் படியான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். இந்த கணக்காய்வை மேற்கொள்வதற்காக பொதுத் தொழிலுள்ள சர்வதேச பட்டயக் கணக்கறிஞர் நிறுவனமொன்றால் எனக்கு உதவப்பட்டது.

நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம்

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழு நிதியத்தின் மீது வருமான வரியை பிரயோகிப்பது தொடர்பில் நிதியம் கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பில் உங்களது கவனத்தை ஈர்க்கின்றேன். இந்த விடயம் காரணமாக எனது அபிப்பிராயம் மாற்றத்திற்கு உட்படுத்தப்படவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்துச் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியம் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் மற்றும் நிதியத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படாதிருப்பின் அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் நிதியத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதிக் கூற்றுக்கள

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம்

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம்
2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான
வருமான செலவினக் கூற்று

	குறிப்பு	2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு ரூபா
கட்டணம் மற்றும் வருமானம்	3	405,074,726
நேர் செலவினம்		-
மொத்த மிகை		405,074,726
ஏனைய வருமானம்	4	10,007,017
நிர்வாக மற்றும் ஏனை செலவினம்	5	(63,859)
காலப்பகுதிக்கான மிகை		415,017,884
ஏனைய விரிவான வருமானம்		-
மொத்த விரிவான வருமானம்		415,017,884

அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிப்பனவுகளாகும்

பக்கங்கள் 58-64 வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஓர் பகுதியாகும்

கொழும்பு
2023 சனவரி 13

நிதிக் கூற்றுக்கள

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம்

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம்
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா
சொத்துக்கள்		
நடைமுறைச் சொத்துக்கள்		
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை	6	13,992,534
காசும் காசுக்கு சமமானவைகளும்	7	353,583,046
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		367,575,580
மொத்தச் சொத்துக்கள்		367,575,580
உரிமைத்துவம் மற்றும் பொறுப்புகள்		
திரண்ட மிகை		366,246,300
மொத்த உரிமைத்துவம்		366,246,300
நடைமுறையல்லாத பொறுப்புகள்		-
நடைமுறைப் பொறுப்புகள்		
ஏனைய செலுத்த வேண்டியவை		42,250
வங்கி மேலதிகப்பற்று	8	1,287,030
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		1,329,280
மொத்த பொறுப்புகள்		1,329,280
மொத்த உரிமைத்துவம் மற்றும் பொறுப்புகள்		367,575,580

குபைரசநள ை டிசயஉமநவள னைனைஉயவந னநனரஉவழைளெ.

பக்கங்கள் 58-64) வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின்

இந்த நிதிக்கூற்றுக்கள் 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன

மூலம் கையொப்பமிட்டது
.....
திரு. ருவன் எஸ். கருணாரத்ன
பணிப்பாளர் - நிதி

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பது ஆணைக்குழு நிதியத்தின் பொறுப்பாகும்

ஆணைக்குழு நிதியத்தின் சார்பாக அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டது

மூலம் கையொப்பமிட்டது
.....
திரு. சாலிய விக்ரமசூரிய
ஆணையாளர்

மூலம் கையொப்பமிட்டது
.....
கலாநிதி பிரியத் பந்து விக்ரம
ஆணையாளர்

கொழும்பு
2023 சனவரி 13

நிதிக் கூற்றுக்கள

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம்

	திரண்ட நிதியம் ரூபா	மொத்தம் ரூபா
காலப்பகுதியின் ஆரம்பத்திலுள்ளவாறான மீதி	-	-
ஆரம்ப பங்களிப்பு	400,000,000	400,000,000
நடப்பாண்டுக்கான மிகை	415,017,884	415,017,884
ஆரம்ப பங்களிப்பு மீதான தீர்த்தல்கள் (குறிப்பு 11)	(400,000,000)	(400,000,000)
ஆணைக்குவுக்கு மாற்றப்பட்ட நிதி	(48,771,584)	(48,771,584)
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	366,246,300	366,246,300

அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிப்பனவுகளாகும்

ப 58-64 முதல் 59 வரையான குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களிற்கான ஓர் பகுதியாகும்

கொழும்பு
2023 சனவரி 13

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம் பக்கம் 4
2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலத்திற்கான
காசுப் பாய்ச்சல் கூற்று

	2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்	
காலப்பகுதிக்கான மிகை	415,017,884
சீராக்கல்கள்:	
நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம்	(10,007,017)
தொழிற்படு மூலதன மாற்றங்களிற்கு முன்னர் செயற்பாட்டு மிகை	405,010,867
வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவற்றில் அதிகரிப்பு	(5,074,726)
ஏனைய செலுத்த வேண்டியவற்றில் அதிகரிப்பு	42,250
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு	399,978,391
பெறப்பட்ட வட்டி வருமானம்	1,089,209
ஆணைக்குழு செயற்பாடுகளிற்காக மாற்றப்பட்ட நிதி	(48,771,584)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசு	352,296,016
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்யச்சல்	-
முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்	-
நிதிச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு	-
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு	352,296,016
காலப்பகுதியின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசும் காசுக்கு சமமானவைகளும்	-
காலப்பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு அ)	352,296,016

காலப்பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசும் காசுக்கு சமமானவைகளும்	குறிப்பு அ
நிலையான வைப்புகள்	350,000,000
வங்கியிலுள்ள காசு	3,583,046
வங்கி மேலதிகப் பற்று	(1,287,030)
	352,296,016

58-64

அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிப்பனவுகளாகும்

பக்கங்கள் 05 முதல் 10 வரை காணப்படும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின்

கொழும்பு
2023 சனவரி 13

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம்

நிதிக் கூற்றுக்களிற்கான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள

1. கூட்டாண்மைத் தகவல்கள்

1.1 பொதுவானவை

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம் (”நிதியம”) என்பது 2021 ஆம் ஆணடின 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் (”சட்டம்”) 23 ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்டு இலங்கையில் செயற்படுகின்ற ஒரு ஆணைக்குழுவாகும். நிதியத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான வணிக இடம் என்பன 901 ஆம் பிரிவு, One Galle Face Tower, 1A, மத்திய வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

1.2 முக்கிய செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

இந்தக் காலப்பகுதியில், ஆரம்ப பங்களிப்புகள் மற்றும் வசதியளித்தல் கட்டணங்கள் ஊடாக நிதிகளை உருவாக்குதல், ஆணைக்குழுவின் செயற்பாடுகளிற்காக அதற்கு நிதி வழங்குதல் மற்றும் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறு மேலதிக நிதியை முதலீடு செய்தல் என்பன நிதியத்தின் முக்கிய செயல்பாடுகளாகும்.

1.3 வெளியிடுவதற்கு அங்கீகாரமளித்த திகதி

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலத்திற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்களை 2023 சனவரி 13 அன்று வெளியிட ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

1.4 நிதிக்கூற்றுக்களுக்கான பொறுப்பு

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

2. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 இணக்கப்பாட்டு அறிக்கை

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையான காலத்திற்கான வருமான செலவினக் கூற்று, திரட்டு நிதியத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் (“நிதிக்கூற்றுக்களின்”) முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் குறிப்புக்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு ஏற்ப தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.1.2 அளவீட்டின் அடிப்படை

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.1.3 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், அது செயல்படுகின்ற முதன்மை பொருளாதாரச் சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி அளவிடப்படுகிறது (தொழிற்பாட்டு நாணயம்). இந்த நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாயில் வழங்கப்படுகின்றன. மீளாய்வுக்குட்பட்ட காலத்தின் போது நிதியத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

2.1.4 பொருண்மை மற்றும் திரட்டல்

ஒத்த விடயங்களைக் கொண்ட ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படுகின்றது. பொருண்மையற்றதாக இல்லாத வேறுபட்ட தன்மை கொண்ட அல்லது செயல்பாட்டு உருப்படிகள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

நிகர அடிப்படையில் எதிரீடு செய்வதற்கு அல்லது சொத்துக்களை உணர்ந்து ஒரே நேரத்தில் பொறுப்பைத் தீர்ப்பதற்கு சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தக்கூடிய உரிமை இருக்கும்போது மாத்திரமே சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பன எதிரீடுசெய்யப்பட்டு, நிதிக்கூற்றுக்களில் நிகரத் தொகை அறிவிக்கப்படுகின்றது. கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ள வ மற்றும் செலவுகள் என்பன எந்தவொரு கணக்கீட்டு நியமத்தினால் அல்லது விளக்கத்தினால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் அன்றி, வருமான செலவினக் கூற்றில் எதிரீடு செய்யப்படுவதில்லை.

2.1.5 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

அ) தீர்ப்புகள்

கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயற்பாட்டில், நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள் மீது மிக முக்கியமான தாக்கத்தைக் கொண்டுள்ள மதிப்பீடுகள் தொடர்பானவை நீங்கலாக, ஆணைக்குழு தீர்ப்புகளை மேற்கொண்டது.

ஆ) மதிப்பீடுகளும் எடுகோள்களும்

அடுத்த நிதியாண்டிற்கு முன் கொண்டு செல்லப்படும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவில் பொருண்மையான சீராக்கல்களை ஏற்படுத்தும் கணிசமான இடர்களைக்கொண்ட எதிர்காலம் தொடர்பான பிரதான எடுகோள்கள் மற்றும் நிதி நிலைமைத் திகதியில் காணப்படும் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிடும் பிரதான எடுகோள்கள் என்பன கருத்திலெடுக்கப்பட்டுள்ளன.

2.1.6 தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கிடைக்கக் கூடியதாக இருந்த தகவல்களின் அடிப்படையில், தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை பயன்படுத்தலின் பொருத்தப்பாட்டினை ஆணைக்குழு மதிப்பிட்டது. 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தினால் வலியுறுத்தப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் எதிர்பார்க்கக்கூடிய எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கான வளங்கள் தம்மிடம் இருப்பதாக நிதியம் திருப்தியடைகின்றது.

2.1.7 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

எல்லா வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களும் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் நேரத்தில் நிலவும் செலாவணி வீதத்தில் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன.

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் நிதிசார் சொத்துகளும் பொறுப்புகளும் காலத்தின் இறுதியில் காணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி சமமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படுவதுடன் அதன் விளைவான ஆதாயங்களும் நட்டங்களும் வருமான செலவினக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் நிதிசாராத சொத்துகளும் பொறுப்புகளும் அவற்றின் பெறுமதிகள் தீர்மானிக்கப்படுகையில் காணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி குறிப்பிடப்படுகின்றன. அதன் விளைவான ஆதாயங்களும் நட்டங்களும் வருமான செலவினக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

2.2 சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்

2.2.1 வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை

வியாபாரப் பெறவேண்டியவை ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு அதன்பின்னர், நட்டக் கழிவுக்கான படியினை கழித்த பின்னர் தாக்கமுள்ள வட்டிவீத முறையைப் பயன்படுத்தி காலத்தேய்மானக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

நட்டக் கழிவுக்கான படியினை கழித்த பின்னர் மதிப்பிடப்பட்ட தேறக்கூடிய தொகையில் ஏனைய பெறவேண்டியவைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. நட்டக் கழிவுக்கான கொடுப்பனவின் அளவு வரமான செலவினக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.2.2 காசும் காசுக்கு சமமானவைகளும்

காசும் காசுக்கு சமமானவைகளும் என்பதில் கையில் உள்ள காசும் வங்கியிலுள்ள காசும் உள்ளடக்கப்படுகின்றன என வரையறுக்கப்படுவதுடன், அவை அதிக திரவத்தன்மை கூடிய முதலீடுகள் மற்றும் பெறுமதியில் சிறிய மாற்றம் ஏற்படுவதற்கான ஆபத்துக்கு உட்பட்ட உடனடியாக காசாக மாற்றக்கூடியவை என அறியப்பட்டவையாகும்.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசும் காசுக்கு சமமானவைகள் என்பதில் கையில் உள்ள பணம், வங்கியிலுள்ள பணம் மற்றும் மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான அதிக திரவத்தன்மை கொண்ட வட்டி-தாங்கும் பிணைப்பத்திரங்கள் மற்றும் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்று ஆகியவை அடங்கும்.

காசுப் பாய்ச்சல் கூற்றினாது நேரில் முறையின் அடிப்படையில் அறிக்கையிடப்படுகிறது.

2.3 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

2.3.1. ஏனைய செலுத்த வேண்டியவை

ஏனைய செலுத்த வேண்டியவைகள் வணிகத்தின் சாதாரண போக்கில் பெறப்பட்ட சேவைகளுக்கு செலுத்த வேண்டிய கடப்பாடுகளாகும். அவற்றுக்கு ஒரு வருடம் அல்லது அதற்கும் குறைவான காலத்திற்குள் பணம் செலுத்த வேண்டுமாயின் அவை நடப்பு பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுவதுடன் அவ்வாறு இல்லையெனில் அவை நடப்பு அல்லாத பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

ஏனைய செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, பின்னர் தாக்கமுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி கழிவீட்டுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. கழிவீட்டின் விளைவு முக்கியமற்றதாக காணப்பட்டால், குறிப்பிட்ட வட்டி விகிதம் இல்லாத குறுகிய கால செலுத்த வேண்டியவை உள்ளபடியான பட்டியல் தொகையில் அளவிடப்படுகிறது.

2.3.2 வருமான வரி

கொழும்பு துறைமுக நகரம் என்பது 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் சட்டத்தால் (”சட்டம்”) அடையாளம் காணப்பட்ட ஒரு சிறப்புப் பொருளாதார வலயம் (SEZ) ஆவதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், வேலைவாய்ப்புகளின் உருவாக்கம், அரசாங்க வருவாய், மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்பு மற்றும் சென்மதி நிலுவை ஆகியவற்றின் அடிப்படையில் தேசியப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு வலயமாகவும் காணப்படுகின்றது. இந்த வலயத்திற்குள் தரமான முதற்தர மற்றும் இரண்டாந்தர முதலீட்டாளர்களை கவர்ந்திழுப்பதற்காக சட்டமானது 13 ஏற்பாடுகளிலிருந்து அல்லது அவற்றின் கீழ் விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதுடன் 7 ஏற்பாடுகள் கொழும்பு துறைமுக நகர அதிகாரப்பிரதேசத்தினுள் எந்தவொரு பிரயோகத்தையும் கொண்டிருக்கவில்லை.

சட்டத்தின் பிரிவு 23 (2) (இ) இன் படி, கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் அமைந்துள்ள அரசாங்க சந்தைப்படுத்தக்கூடிய நிலம் மற்றும் செயற்திட்ட கம்பனிக்குரிய சந்தைப்படுத்தக்கூடிய நிலத்தின் ஏதேனும் குத்தகையிலிருந்து பெறப்பட்ட அனைத்துத் தொகைகளும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியத்திற்கு (”நிதி”) செலவு வைக்கப்பட வேண்டுமென்பதுடன் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, குத்தகையின் அந்தந்த ஒப்பந்தங்களைச் செயல்படுத்தும் அதே நேரத்தில், அனுமதிக்கப்பட்ட செலவினங்களைக் கழித்த பிறகு, எஞ்சிய தொகை ஒருங்கிணைந்த நிதிக்கு அனுப்பப்பட வேண்டும். மேலும், சட்டத்தின் பிரிவு 23 (2) (ஈ) இன் படி, கொழும்பு துறைமுகத்தின் நகர

அதிகாரப் பகுதிக்குள் நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணங்களை உள்நாட்டு மதிப்பீட்டு விகிதங்கள் மற்றும் ஆணைக்குழுவால் விதிக்கப்படும் வேறு ஏதேனும் வரிகள் மூலமான அனைத்துத் தொகைகளையும் நிதியத்திற்கு பெறப்படலாம். இது காலாண்டு அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு அரசாங்க வருவாயின் ஒரு பகுதியாக காணப்படும்.
எனவே, சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட முதலீட்டு உதவிச் சேவைகளை வழங்குவதில் பெறப்பட்ட மற்றும் பெறப்பட வேண்டிய அனைத்துத் தொகைகளையும் சேகரிப்பதற்கான பாதுகாவலராக அரசாங்கத்தின் சார்பில் நிதியம் ஒன்று பராமரிக்கப்படுவதுடன் ஆணைக்குழுவின் செலவினங்களை செய்வதற்கு மாத்திரமே நிதியத்தில் இருந்து பணத்தை எடுக்கலாம்.

மேற்கூறியவற்றிற்கு இணங்க, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியமானது வருமான வரி செலுத்துவதற்கு பொறுப்பாகாது என்று நிதியம் கருதுகிறது.

2.3.3 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டைக் கொண்டிருக்கும் போதும் கடனைத் தீர்ப்பதற்கு வளங்களின் வெளியேற்றம் தேவைப்படுகின்ற; மற்றும் தொகை நம்பகத்தன்மையுடன் மதிப்பிடப்பட முடிகின்ற போதிலும் நிதியம் ஏற்பாடுகளை அங்கீகரிக்கின்றது. எதிர்கால செயற்பாட்டு நட்டங்களிற்காக ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

ஒரே மாதிரியான பல கடப்பாடுகள் இருக்கும் பட்சத்தில், தீர்ப்பதற்கான ஒரு காசு வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதற்கான சாத்தியக்கூறுகள், கடப்பாடுகளின் வகுப்பை முழுவதுமாகக் கருத்தில் கொண்டு ஏற்பாடுகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதே வகைக் கடப்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு விடயத்தின் காசு வெளிப்பாய்ச்சலுக்கான சாத்தியம் சிறியதாக இருந்தாலும், ஒரு ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகிறது.

2.3.4 கடப்பாடுகள்

அறிக்கையிடல் தேதியில் உள்ள அனைத்து பொருண்மையான கடப்பாடுகளும் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகளில் அடையாளம் காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 வருமான மற்றும் செலவினக் கூற்று

2.4.1 வருமான அங்கீகாரம்

2.4.1.1. வசதியளித்தல் கட்டணம்

சட்டத்தின் பிரிவு 23(2)(அ) இன் படி, இந்தச் சட்டம் அரம்பிக்கப்பட்ட திகதி முதல் 2028 யூன் 30 முடிவடையும் தேதி வரை செயற்திட்ட நிலத்தின் ஏதேனும் குத்தகையிலிருந்து பெறப்பட்ட அனைத்துத் தொகைகளிலிருந்தும் ஒரு சதவீதத்திற்கு (1%) சமமான தொகையை செயற்திட்ட கம்பனியிடமிருந்து பெறுவதற்கு நிதியத்துக்கு உரிமை உண்டு.

வசதியளித்தல் கட்டணம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

2.4.1.2. வட்டி வருமானம்

வட்டி வருமானம் மற்றும் செலவு ஆகியவை தாக்கமுள்ள வட்டிவீத முறையைப் பயன்படுத்தி மிகையில் அல்லது பற்றாக்குறையில் அங்கீகரிக்கப்படுகின்றன. "தாக்கமுள்ள வட்டி விகிதம்" என்பது, நிதிச் சொத்தின் மொத்தச் முன்கொண்டு செல்லும் தொகை அல்லது நிதிப் பொறுப்பின் கடனைத் திருப்பிச் செலுத்தும் செலவுக்கு, எதிர்பார்க்கப்படும் நிதிக் கருவியின் மூலம் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது கழிவீட்டை சரியாகக் குறைக்கும் விகிதமாகும்.

2.4.1.3. ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

2.4.2 செலவுகள்

அ) செலவினம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது. வணிகத்தின் சாதாரண போக்கில் ஏற்படுகின்ற மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை வினைத்திறனான நிலையில் பராமரிப்பதில் ஏற்படுகின்ற அனைத்து செலவுகளும் அந்தக் காலத்திற்கான பெறுபேற்றை பெறுவதற்காக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆ) நேரடியாகக் காரணமானவை தவிர்ந்த, கணிசமான கால அவகாசம் தேவைப்படும் சொத்துக்களான தகுதிச் சொத்துக்களை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு பெறப்படுகின்ற கடன் செலவுகள் அவை ஏற்படும் காலகட்டத்தில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன. அவற்றின் குறித்துரைத்த நோக்கத்திற்காக தயாராகும் வரை, அல்லது குறித்த சொத்துக்கள் அவற்றின் நோக்கம் அல்லது விற்பனைக்கு கணிசமாக தயாராக இருக்கும் வரை அந்த சொத்துகளின் கிரயத்தில் அச்செலவுகள் சேர்க்கப்படும்.

இ) வருமான மற்றும் செலவுக் கூற்றை வழங்குவதற்கு, செலவு முறையின் செயல்பாடுகள் நிதியத்தின் செயலாற்றல் கூறுகளை நியாயமான முறையில் முன்வைக்கிறது என்பதாக நிறைவேற்றுக் குழுவானது அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய முன்வைத்தல் முறை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

2.5 அறிக்கையிடல் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள்

அறிக்கையிடப்பட்ட தேதிக்குப் பிறகு நிகழும் அனைத்து முக்கிய நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, தேவையான இடங்களில், நிதிக்கூற்றுக்களிற்கான அந்தந்த குறிப்புகளில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம்

நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புகள

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு நிதியம்
நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள்

		2021 மே 27 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு ரூபா
3.	**கட்டணம் மற்றும் வருமானம்**	
	வசதியளித்தல் கட்டணம்	405,074,726
		405,074,726
4.	**ஏனைய வருமானம்**	
	நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம்	10,007,017
		10,007,017
5.	**நிர்வாக மற்றும் ஏனைய செலவினம்**	
	வங்கிக் கட்டணம்	17,215
	வங்கி மேலதிகப்பற்று மீதான வட்டி	4,394
	கணக்காய்வுக் கட்டணம்	42,250
		63,859
		As at 31.12.2021 &gh
6.	**வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை**	
	வியாபாரப் பெறவேண்டியவை	5,074,726
	நிலையான வைப்புக்கள் மீது பெறவேண்டிய வட்டி	8,917,808
		13,992,534
7.	**காசும் காசுக்கு சமமானவைகளும்**	
	நிலையான வைப்புகள்	350,000,000
	வங்கியிலுள்ள காசு	3,583,046
		353,583,046
8.	**வங்கி மேலதிகப்பற்று**	
	இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு	1,287,030
		1,287,030

9. ஒப்பந்தக் கடப்பாடுகள்

9.1 நிதிசார் கடப்பாடுகள்

அறிக்கையிடல் திகதியின் இறுதியில் உள்ளவாறு எவ்வித பொருண்மையான நிதிக் கடப்பாடுகளும் இல்லை.

9.2 மூலதனக் கடப்பாடுகள்

அறிக்கையிடல் திகதியின் இறுதியில் எவ்வித பொருண்மையான மூலதனக் கடப்பாடுகளும் இல்லை.

10. நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள்

அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறு எவ்வித நிகழத்தக்க பொறுப்புக்களோ அல்லது சொத்துக்களோ இல்லை.

11. செயற்திட்டக் கம்பனிக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் (“சட்டம்”) பிரிவு 23 (2) (அ) இன் படி, “இலங்கை ரூபாய் நானூறு மில்லியன் (ரூ. 400,000,000) கொழும்பு துறைமுக நகரத்தின் முதலீட்டு வசதியளித்தல் தொழிற்பாடுகளுக்காக, ஆணைக்குழுவின் நிதியத்துக்கு செயற்திட்ட கம்பனி செலுத்த வேண்டிய ஆரம்ப பங்களிப்பாகும். இந்தத் தொகையை இந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படக்கூடிய பிற செலவுகள் உள்ளிட்ட கொழும்பு துறைமுக நகரத்தின் சர்வதேச ஊக்குவிப்புச் செலவுகள் மற்றும் ஆணைக்குழுவின் ஆரம்ப செயற்பாட்டுச் செலவுகளிற்காக ஆணைக்குழுவால் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் இந்தத் தொகையானது இக்காலப்பகுதியில் ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டது.

ஆரம்பப் பங்களிப்பைப் பெற்ற பின்னர், இந்தக் காலப்பகுதியில், செயற்திட்ட கம்பனியிடமிருந்து ரூ.405,074,726 பெறத்தக்க வசதிக் கட்டணத்திற்கு எதிராக ஆரம்பப் பங்களிப்பை எதிரீடு செய்வதற்கு ஆணைக்குழு செயற்திட்ட கம்பனியுடன் “எதிரீடு செய்தல் உடன்படிக்கை” செய்துகொண்டது. சந்தைப்படுத்தக்கூடிய ஒவ்வொரு நிலத்தின் குத்தகைக்கும் நிதியத்தினால் உரிமையளிக்கப்பட்ட தொகையின் 1% ஐக் இது குறிக்கிறது. சட்டத்தின் பிரிவு 23 (2) (ஆ) இன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த எதிரீடு செய்தல் உடன்படிக்கை செயற்திட்டக் கம்பனியுடன் செய்துகொள்ளப்பட்டது.

சட்டத்தின் பிரிவு 23 (2) (ஆ) இன் படி, “கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் அமைந்துள்ள செயற்திட்ட கம்பனியின் சந்தைப்படுத்தக்கூடிய காணியின் எந்தவொரு குத்தகையிலிருந்தும் பெறப்பட்ட அனைத்துத் தொகைகளிலிருந்து ஒரு சதவீதத்திற்கு (1%) சமமான தொகை கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதிக்குள் அமைந்துள்ள சந்தைப்படுத்தக்கூடிய நிலம் தொடர்பான முதலீட்டு வசதியாளரின் செயல்பாடுகள், ஆணைக்குழுவின் செயல்பாடுகள், மேலே உள்ள 23 (2) (அ) இன் படி செயற்திட்ட கம்பனி வழங்கிய ஆரம்ப பங்களிப்பு மற்றும் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் அதற்கு செலுத்த வேண்டிய வரிகள் - என்பன இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 2028 யூன் 30 இல் முடிவடைகின்ற நாளிலிருந்து கழித்த பிறகு ஆணைக்குழுவிற்கு ஏற்படும் செலவினங்களைச் செலுத்த ஆணைக்குழுவால் பயன்படுத்தப்படும்.

12. அறிக்கையிடல் திகதியின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

வெளிநாட்டு நாணய கையிருப்பு குறைதல் மற்றும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் காரணமாக இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இதன் விளைவாக, ஏனைய நிறுவனங்களைப் போலவே, எதிர்கால நடவடிக்கைகளுக்கான சவால்களை நிதியமும் எதிர்கொள்கிறது. எவ்வாறாயினும், போதிய நிதியளிப்பு மற்றும் நிதியத்தின் கடுமையான செலவு முகாமைத்துவத்தை உறுதிசெய்த விவேகமான தீர்மானமெடுத்தல் செயல்முறையின் காரணமாக நிதியத்தால் நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும் என ஆணைக்குழு நம்பிக்கை கொண்டுள்ளது. ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பலமும் அனுபவமும் நிதியத்திற்கு மேலதிக ஆறுதலாக காணப்படுவதுடன், இந்த சவாலான காலகட்டத்தில் தொடர்ச்சியான ஆதரவை இது உறுதி செய்யும். எனவே, இந்த நிதிக்கூற்றுக்களில் அறிவக்கப்பட்டுள்ள மீதிகளுக்கு எந்த சீராக்கமும் தேவைப்படவில்லை.

மேற்குறிப்பிட்டவைக்கு மேலதிகமாக, நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு அறிக்கையிடல் திகதியிலிருந்து எவ்வித நிகழ்வுகளும் ஏற்படவில்லை.

↘ கூட்டிணைப்புத் தகவல்கள்

சட்ட ரீதியான நிலவரம்
2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

பதிவு செய்யப்பட்ட முகவரி
கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு
யூனிட் 901, 9வது தளம்
ஒன் காலி முக கோபுரம்
1A மத்திய வீதி
கொழும்பு 02
இலங்கை

வங்கியாளர்கள்
இலங்கை வங்கி
மக்கள் வங்கி

செயலாளர்
கார்ப்பரேட் அட்வைசரி சர்வீசஸ் (பிரைவேட்) லிமிடெட்

கணக்காய்வாளர்
தேசிய கணக்காய்வு அலுவலகம்

வரிசை அமைச்சு
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

அமைச்சர்
சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இராஜாங்க அமைச்சர்
கௌரவ அமைச்சர் திலும் அமுனுகம

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவால் உள்வாரியாக வடிமைத்து அபிவிருத்தி செய்யப்பட்டது.



கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு

(+94) 11 7560 006

info@portcity.gov.lk

www.portcitycolombo.gov.lk